தொகுதி 7.] 1928ஹ அக்டோபர்மீ 1உ [பகு

மனமோகினி.

ஆக்கியோர்
ஆரணி. குப்புசாமி முதலியார்

பிரசுரகர்த்தர்
நா. முனிசாமி முதலியார்,
ஆனந்த நிலையம், சென்னை.

மனமோகினி

ஓர் மாதாந்த நாவல் சஞ்சிகை.

இதில் இனிய நாவல்களே வெளிவரும். நாவலுக்கென்றே ஒரு சஞ்சிகையை வெளிப்படுத்தி வந்தால், அது தமிழபிமானிகட்குத் திருப்தி யளிக்கக் கூடியதா யிருக்குமென்று நமது "ஆனந்த போதினிச்" சந்தாதாரர்களிற் பலர் கேட்டுக்கொண்டபடி இதனை 1922ஆு பிப்ரவரிமீ 1வ முதல் ஆரம்பித்து நடத்தி வருகிறோம். இதில் ஒவ்வொரு பெரிய நாவல் தொடர்ச்சியாகவந்து ஆறுமாதங்களுக் கொருமுறை ஒவ்வொரு முழுப் புத்தகம் முடிவுபெறும். இதற்குமுன் மகா அற்புதம்பொருந்திய அநேக நாவல்களின் ஆசிரியரான ஸ்ரீமான் ஆரணி - குப்புசாமி முதலியாரவர்களால் இயற்றப்பட்ட "அமராவதி" "பவளத்தீவு" "ஞான செல்வாம்பாள்" "அற்புதமர்மங்கள் அல்லது ஆனந்தஸிங்கின் அஷ்டஜெயங்கள்" "கற்பகச் சோலையின் அற்புதக் கொலை" "கடற்கொள்ளைக்காரன்" என்ற நாவல்கள் பூர்த்தயாகி இப்போது "இராஜாமணி அல்லது, ஓர் அபூர்வ மர்மம்" என்றநாவல் வெளியாய் வந்து இம்மாதத்தோடு முடிவுபெற்று இச்சஞ்சிகையின் ஈற்றில் 'இரத்தினபாய் அல்லது இரகசிய சங்கம்" என்ற நாவல் தொடங்கப் பெற்றிருக்கிறது. முடிவான நாவல்கள் வேண்டுவோர் புத்தகமாகவே வாங்கிக்கொள்ள வேண்டும்; அவற்றின் தனிச் சஞ்சிகைகள் கிடையா. இச்சஞ்சிகைகள் ஒவ்வொன்றும் கிரௌன் 80-பக்கங் கொண்டது. அடியிற் கண்ட விலாசத்திற்கு உடனே எழுதி வி-பி-யிலோ முன்பணம் அனுப்பியோ பெற்றுக் கொள்ளுங்கள்.

ஒவ்வொரு வருஷத்திலும் பிப்ரவரிமீ ஆரம்பமே இச்சஞ்சிகைக்கு வருஷ ஆரம்பம். எப்பொழுது சந்தாதாரராகச் சேர்ந்தாலும் அந்த வருஷம் பிப்ரவரிமாதம் முதற்கொண்டு கணக்கு வைக்கப்படும். உள் நாட்டிற்கு வருஷ சந்தா ரூ. 2—8—0
வெளி நாட்டிற்கு ,, 3—0—0

இதுவரையில் சஞ்சிகை ரூபமாக வெளிவந்திருக்கும் புஸ்தகங்கள்.

அமராவதி 2 பாகமும் ரூ. 4 0 பவளத்தீவு 2 பாகமும் ரூ. 3 0
ஞானசெல்வாம்பாள் 5 பாகமும் ரூ. 9 10 0
அர்ஜுனஸிங், சுந்தர் ,, 0 2 0
அற்புதமர்மங்கள் அல்லது ஆனந்தஸிங்கின் அஷ்டஜெயங்கள் 1 1[illegible]
கற்பகச்சோலையின் அற்புதக்கொலை ரூ. 1 4
கடற் கொள்ளைக்காரன் 2-பாகமும் ,, 3
இராஜாமணி அல்லது ஓர் அபூர்வ மர்மம் ,, 2

மானேஜர்:—"ஆனந்த நிலயம்," தபால்பெட்டி செ

அச்சமயம் யாரோவருவதால் வீதியின்கதவு திறக்கப் படுகிற சத்தம் கேட்டது. கருணாகரர், “ஆ! வருவது இரத்னபாயின் தாயாகவே யிருக்கவேண்டும். இந்த விஷயத்தை நான் உன்னிடம் ஒப்பிக்கப் போவதாய்க் கூறி நேரில் உன்னைக்கண்டு பேசும்பொருட்டு அம்மாதை யிங்கு வரும்படி கூறியிருந்தேன்.” என்று கிருஷ்ணராவை நோக்கிக் கூறினர். அதற்குள் அம்மாதும் உள்ளே வந்து விட்டாள். கருணாகரர் அம்மாதை வரவேற்று “பத்மா பாயம்மாள்! நான் உன்னிடம் கூறிய எனது நண்பர்கள் இவர்கள் தாம்; இதோ இவர்தாம் துப்பறியும் சிங்கமாகிய கிருஷ்ணராவ். இவர்தாம் ஜகநாதம்பிள்ளை” என்று இருவரையும் அம்மாதுக்கு அறிமுகமாக்கி வைத்தார்.

பத்மாபாய் குட்டையான மெலிந்ததேகமுடையவள். வயது நாற்பதிற்குமே லிருக்கலாம். அவளுடைய முகத்தாலும் உடையாலும் அவள் எளிய நிலைமையி லிருப்பவளாகத் தோன்றினும் நாணயமான உயர்குடியிற்பிறந்து நாணயமாகவே வளர்க்கப்பட்டவ ளென்பதும், முன்பு நல்லபோகங்களை யனுபவித்துக்கொண் டிருந்தவ ளென்பதும் தெரிந்தன. அதாவது அவள் வாழ்ந்து கெட்டவ ளென்று நன்கு விளங்கினள்.

பத்மாபாய் தன் புத்திரி காணமற்போனதைப் பற்றி மிக்க துயரமுடையவளாக விருந்தாலும் அவளைக் கண்டு பிடிக்கவேண்டும் என்ற வைராக்கியத்தால் தன் துயரத்தைச் சகித்துக்கொண்டு தைரியத்தோ டிருந்தாள். அவள் கிருஷ்ணராவை நோக்கி “நீ எப்படியாவது என் புத்திரியைக் கண்டுபிடிப்பாயென்று நம்புகிறேன். கருணாகரம் பிள்ளை மிக்க அன்போடு உன்னை யதற்காக ஏற்பாடுசெய்தார். போலீஸார் கண்டு பிடிக்கிறோம் கண்டுபிடிக்கிறோம்

2120

என்று கூறுகிறுர்களே யன்றி இரத்னுபாயைக் கண்டு பிடிப்பதாய்க் காணும்." என்ருள்.

அப்போது அவள் கூறியமாதிரியால் கிருஷ்ணுராவுக்கும் இரக்க முண்டாயிற்று. கருணுகரம்பிள்ளை அவளை நோக்கி, "நீ என்னிடம் கூறிய சங்கதிகளை யெல்லாம் கிருஷ்ணுராவிடம் கூறு" என்ருர்.

பத்மாபாய் தன் துயரத்தை யடக்கிக்கொண்டு, "எனக்கு அதிகமாக ஒன்றும் தெரியாது. கடந்த சனி வாரம் அவள் தொழில்செய்யும் காரியாலயத்தி லிருந்து முன்னுடியே புறப்பட்டுக் கடையில் ஏதோ சாமான்கள் வாங்கவேண்டுமென்று கூறிச்சென்ருள். அவ்வாறே கடைகளுக்குச் சென்ருள். அங்கிருந்து சற்றுதூரம் சென்றபின் அவள் அடியோடு காணப்படவில்லை" என்ருள்.

கிருஷ்ணுராவ்:—"அப்படியாயின் அவள் எங்குச்சென் றிருக்கிருள், எப்படிப்போனுள் என்பவற்றுள் ஒரு சங்கதியும் உனக்குத் தெரியாதோ?" என்று கேட்டான்.

இவ்வாறு பெண்கள் காணுமற்போன விஷயங்கள் பல வற்றைப்பற்றி கிருஷ்ணராவ் ஆராய்ச்சி செய்திருக்கிருன். அவற்றில் சிலவற்றில், அக்குடும்பத்தி லுள்ளளோர் ஆரம்பத்தில் அதைப்பற்றிய உண்மையைக் கூறியிருந்தால்தான் காணுமற் போனவர்களைச் சுலபமாய்க் கண்டு பிடிக்கலாகும் என்பது அவனுக்குத் தோன்றியது. பத்மாபாயம்மாள் கூறியவையாவும் உண்மையே யென்று அவள்முகத்தால் விளங்கியது.

மேலும் அவள் "உண்மையாகவே எனக்கொன்றும் தெரியாது. இரத்னுபாயின் கூட அதேகாரியாலயத்தில் வேலைசெய்யும் இன்னெருபெண் சற்றுதூரம் அவளோடு கூடச்சென்று பிறகு ஒருசந்தில் திரும்பி அவளை விட்டுப்

பிரிந்துபோய்விட்டாள். அந்த இடத்திலிருந்து எங்கள் வீடு மிக்கதூரமில்லை. இரத்னபாய் இன்னும் சற்று தூரம் உலவிக்கொண்டு வந்திருந்தாலும் சற்று நேரத்திற்குள் வீட்டிற்கு வந்து விட்டிருக்கலாம்.'' என்றாள்.

கிருஷ்ணராவ் அவள் மனதில் என்ன உணர்ச்சியுண்டாகிறது, என்னதான் கூறுகிறாள் பார்க்கலாம் என்று கருதி "அப்படியானால் அவள் யாரேனும் சிநேகிதரைச் சந்தித்திருக்கலாகும். அவர்கள் கூடப் போயிருக்கலாகும்'' என்றான்.

பத்மாபாய் மிக்க வியப்படைந்து "அய்யோ அவள் யார் கூடச்சென்றிருப்பாள். இரத்னபாயைப் பற்றிய விஷயம் உங்களுக்குச் சரியாகத் தெரியாதுபோல் காண்கிறது'' என்று கண்களில் நீர் துளித்துக் கொண்டே கூறினாள்.

அச்சமயம் கருணகரம் பிள்ளை, "அப்படியல்ல. அவள் எத்தகைய வாலிபரும் விரும்பக் கூடியவள். அதே காரியாலயத்திலுள்ள அனேக வாலிபர்கள் அவள்மேல் விருப்பங் கொண்டிருப்பார்கள். ஆனால் நான் விசாரித்தறிந்தவரையில் அவள் யாரிடத்திலும் விருப்பம்கொண்டிருக்கவில்லையென்பது தெரிகிறது. இன்னும் அவள் மற்ற கன்னிகைகள்போல் சந்தோஷமாகவும் கேளிக்கையாகவும் காலத்தைக் கழிக்கப் பிரியமுடையவள்; மேலானநிலைமைக்குவர ஆசையுள்ளவள். இவ்வளவேயன்றி அவளிடம் வேறு கெட்டகுணங்கள் நடக்கைகள் ஆகியவற்றில் ஒன்றுமில்லையென்றே தெரிகிறது'' என்றார்.

பத்மாபாய்:—"அவள் மிக்க நல்லவளே. இவர் கூறியது போல் அவள் மேல்நிலைமையையடைய ஆவலுடையவள்தான். எனக்குக்கூட அந்த ஆசையிருக்கிறது. ஒருவர்க்கு நாம் முன் இருந்த நிலைமையை யடைய வேண்டுமென்று விருப்பம் இருப்பது இயற்கையே;

அவ்வளவேயன்றி வேறில்லை." என்று கூறிவிட்டு "அந்தோ! இந்தப் பெரியநகரத்தில் காணுமற் போன என்புத்திரியைக் கண்டு பிடிப்பவர்கள் ஒருவருமில்லையா? ......" என்று பிரலாபித்தாள்.

கிருஷ்ணுராவ்:—"அம்மா! நான் கூறுவதைப் பூரணமாக நம்பு. உனது புத்திரியைக் கண்டு பிடிக்க என்னுல் எவ்வளவு கூடுமோ அவ்வளவு முயற்சியும் நான் கட்டாயம் செய்யாமல் விடமாட்டேன்" என்றுன்.

இம்மொழிகளைக் கேட்டதும் அம்மாதின் மனதில் நம்பகம் உண்டாயிற்று; அது அவள் முகத்தில் நன்றுய் விளங்கியது. அவள் கிருஷ்ணுராவுக்கும் கருணுகரருக்கும் வந்தனமளித்து விட்டு அவர்களிடம் விடைபெற்றுச் சென்றுள்.

2—வது அத்தியாயம்.

பத்மாபாய் புறப்பட்டதும் கருணுகரம்பிள்ளை "நான் என் காரியாலயத்திற்குச் செல்கிறேன். ஏதேனும் சங்கதி கிடைத்தால் உனக்குத் தெரிவிக்கிறேன்" என்று கிருஷ்ணுராவுக்குக் கூறிவிட்டு அந்தப் பத்மாபாய் கூடவே புறப்பட்டுச் சென்றுர். அதன்பின் ஜகனுதன் கிருஷ்ணுராவை நோக்கி "கருணுகரம் பிள்ளை இந்நகரத்தின் கீழ்ப் பாகத்தில், புதிதாக வந்துசேர்ந்த பெண்களைப் பற்றிய விஷயத்தைக் கண்டு பிடித்தாரே, அத்தகைய விஷயமாகவே யிதுவும் இருக்குமோ?" என்று கேட்டான்.

கிருஷ்ணுராவ்:—"நீ, பெண்கள் கெட்ட நடக்கையால் வீட்டைவிட்டு ஓடிப்போவது, தரித்திரக் கொடுமை சகிக்க முடியாதபடியால் வீட்டைவிட்டோடுவது ஆகிய இத்தகைய விஷயங்களைப்பற்றிக் கூறுகிருய்.

இவ்வகை விஷயங்களால் காணமற்போகிறவர்களைக் கண்டுபிடிக்கவே நமது துரைத்தன வக்கீலாகிய கருணாகரம் பிள்ளை மிக்க கஷ்டப்பட்டுக்கொண் டிருக்கிறார். இது அப்படிப்பட்டவற்றைச் சேர்ந்ததல்ல. இது ஒரு பெரிய விவகாரம். இது வர்த்தகரீதியாய் நடந்து பெண்களை யழித்து விடுகிறது. இதை யொழித்துவிட எனக்குக் கடவுள் சந்தர்ப்பம் அளிக்கும் பட்சத்தில் நான் மிக்க நன்றியுடையவனாக விருப்பேன்.

இப்போது நான் என்ன செய்யக் கருதுகிறேன் என்பதைக் கூறுகிறேன். நாம் செய்யவேண்டியது இன்னதென்று திட்டமாய் தெரியும்படி கூறுகிறேன். இவ்வாறு அடியோடு இந்நவீனபுரி நகரில் காணமற்போன கன்னிகைகள் ஒரு பட்டாளத்திற்கு மேல் இருக்கிறார்கள். அவர்களைப்பற்றி மொத்தமாகச் சில தகவல்கள் எனக்குத் தெரிய வேண்டும். நீ சமாசாரம் சேகரித்தனுப்பும் நக்ஷத்திரப் பத்திரிகையின் பழைய பிரதிகளை யாராய்ந்து உன்னால் கூடிய சமாசாரத்தைச் சேகரம் செய்யக் கூடுமல்லவா?'' என்றான்.

ஜகநாதன் அவ்வாறே கூடுமென்றும், தான் சீக்கிரத்தில் அதைக் கண்டறிந்து வந்து கூறுவதாகவும் வாக்களித்தபின் கிருஷ்ணராவ் அவனிடம் விடை பெற்றுக்கொண்டு சென்றான். கிருஷ்ணராவுக்குக் கையில் உடனே கவனிக்கவேண்டிய வேறு விவகாரங்கள் இருந்தபடியால் அவன் உடனே தன் கவனம் முழுமையும் இதிற் செலுத்தக்கூடியவனாக இருக்கவில்லை.

கிருஷ்ணராவ் கூறியபடியே ஜகநாதன் பழைய பத்திரிகைகளை யெல்லாம் ஆராய்ச்சி செய்தான். இவ்வாறு இரத்னபாயைப் போல் ஒரு காரணமும் தெரியாமல்

மறைந்துபோன கன்னிகைகள் கடந்த சில மாதங்களுக்குள் அநேகர் இருக்கிறார்கள் என்பது தெரிந்தது. அவர்கள் பெரும்பாலும் மிக்க செல்வம் பொருந்திய குடும்பத்தைச் சேர்ந்தவர்களுமல்ல-மிக்க ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களு மல்ல-யாவரும் நடுநிலைமையி லிருப்போரே. போலீஸ் இலாகாவிலுள்ள கணக்கின்படி கூட ஒருவருடத்திற்குள் ஆயிரத்திற்கு மேற்பட்ட பெண்கள், பதினலு முதல் இருபத்தோருவயதிற் குட்பட்டவர்கள், நவீனபுரியில் காணுமற்போயிருக்கிறார்கள். ஆயினும் இதுகுறைந்த தொகையே யென்று ஜகநாதனுக்குத் தெரியும். ஏனெனில் நல்ல குடும்பத்தில் காணுமற்போன பெண்களைப்பற்றி அக் குடும்பத்தார் மானத்திற் கஞ்சி வெளியிடாமலே யிருந்துவிட்டிருக்கிறார்கள் என்பது அவனுக்குத் தெரியும். ஜகநாதனுடைய ஆராய்ச்சியில் இவற்றிற்குப் பல காரணங்களிருப்பதாகத் தெரிந்தன. ஆனல் இவற்றில் சிலவற்றிற்குக்கூட ஒரேகாரணம் இருக்குமென்று புலப்படவில்லை.

கடைசியில் அவன் சிந்தித்துக்கொண்டே கிருஷ்ணராவின் இரசாயனசாலையறையை நோக்கிச் சென்றான். அவன் கிருஷ்ணராவைக் கண்டதும் "இத்தனை பெண்களும் எங்குப் போய்விட்டார்கள்? இரத்னபாய் எங்குப் போய்விட்டாள்?" என்றான். ஜகநாதன் கிருஷ்ணராவினிடம் தனக்குண்டான சந்தேகங்களைக் கூறிக்கொண்டேயிருக்கையில் டெலிபோன் மணி யடித்தது.

கிருஷ்ணராவ் உடனே எழுந்து போய்ப் பேசினன். கருணாகரம் பிள்ளையே கிருஷ்ணராவிடம் அச்சமயம் பேசியவர். துரைத்தன வக்கிலாகிய கருணாகரம் பிள்ளையே. அவர் மிக்க மனப்பதைப்போடு "தூர்க்கையப்பிள்ளை—முதலாளி—ஐந்தாவது வீதியிலிருக்கும் இரகசிய விருந்

தறையில் ஒரு கள்ள டெலிபோன் இப்போதுதான் கண்டு பிடித்தாராம்" என்று கூறினர்.

உடனே ஜகநாதனுக்கு அச்சங்கதியின் விசேஷம் எப்படிப்பட்டதென்று தெரிந்துவிட்டது. அச்சமயம் இரத்னுபாயின் சங்கதிகூட மறந்து விட்டது. தூர்க்கையப் பிள்ளை இராசாங்க விவகாரங்களில் தலைவன். அவனுடைய கட்சி மிக்க பலம் பொருந்தியது. அவன் பருத்த மனிதன். கருணாகரம் பிள்ளையின் அந்தரங்கப் பகைவன்.

சங்கதியாவும் கேட்டபின் கிருஷ்ணாராவ் ஜகநாதனை நோக்கி "கருணாகரம்பிள்ளை உடனே நம்மைத்தமதுகாரியாலயத்திற்கு வரும்படி கூறுகிறார்." என்று கூறியதும், "சட்டையை யெடுத்தணிந்து கொண்டு புறப்படு" என்று கூறிக்கொண்டே வெளிச்சென்றான். ஜகநாதன் துரிதமாய் அவன் கூடவே சென்றான். இருவரும் வண்டியேறித் துரிதமாய் ஐந்தாவது வீதிக்குச் சென்றார்கள். வழியில் கிருஷ்ணாராவ் ஜகநாதனை நோக்கி "தூர்க்கையனுக்கு ஐந்தாவது வீதியில் விருந்து நடத்தவும் ஆலோசனை செய்வதற்கும் ஒரு இடமிருக்கிறது" என்றான்.

ஜகநாதன் தலையசைத்தான். அந்த விடத்தில் பெரிய இரகசியங்கள் நடைபெறுவதுண்டு. கிருஷ்ணாராவ் "அந்த இடத்தில் நடக்கும் இரகசியத்தையறிய யாரேனும் டெலிபோன் வைத்திருப்பார்கள். தூர்க்கையன் எப்படியோ அதைக் கண்டு பிடித்து விட்டிருக்கிறான்" என்றான்.

ஜகநாதன், "என்ன நீ கூறுவது ?" என்றான். ஏனெனில் டெலிபோனில் சம்பாஷணை நடந்தபோது கிருஷ்ணாராவ் பேசுவது மட்டுமே அவனுக்குக் கேட்டதால் பூரண சம்பாஷணை தெரியாது. ஆகையால் அவனுக்குக் கலவரமாகவேயிருந்தது. அதனால் அவன், "அவன் என்ன செய்தான்?" என்றான். கிருஷ்ணாராவ் "ஏன் சமாசாரமனுப்பும்

கருவியை யழித்துவிட்டுக் கம்பிகளை யறுத்து விட்டிருப்பான்" என்ருன்.

ஜகநாதன்:—அக்கம்பிகள் எங்குச் செல்லும்.

கிருஷ்ணுராவ் தலையசைத்துவிட்டான். "அவனுக்கே யின்னும் பூரண சங்கதி தெரியாது போலும்; ஒரு சமயம் கருணுகரம் பிள்ளையே யதைப்பற்றிக் கூறவில்லை போலும் அல்லது அவருக்குச் சமாசாரமனுப்பிய ஆசாமியே யின்னும் அதை யறியவில்லைபோலும்" என்று ஜகநாதன் எண்ணிக்கொண்டான். இருவரும் கடைசியில் கருணுகரம் பிள்ளையின் காரியாலயத்தில் போய்ச் சேர்ந்தார்கள்.

கருணுகரம்பிள்ளை இவர்களைக் கண்டதும் சந்தோஷத்தோடு வரவேற்ருர். அவர் முகத்தில் பெருங்கவலை யொழிந்தது போன்ற குறியிருந்தது. கிழிஷ்ணுராவ் வந்ததாலேயே யவருக்கு அச்சந்தோஷம் உண்டாயிற்று. இன்னெரு விஷயம் இருவர்க்கும் மிக்க வியப்பளித்தது. கருணுகரம் பிள்ளையின் எதிரில் ஒரு மாது உட்கார்ந்து கொண்டிருந்தாள். அவள் முகக்குறியால் மனதில் எவ்வளவோ கலவரம், பீதி முதலியவற்றை கஷ்டத்தோடு அடக்கிக் கொண்டிருக்கிருளென்பது தெரிந்தது. கருணுகரம்பிள்ளை இருவரையும் நோக்கி "இந்த அம்மாள் உலகாம்பாளம்மாள்" என்று கூறி இவர்களுக்கவளை அறிமுகமாக்கி வைத்தார். அம்மாது வசீகரமானவள். அபூர்வமான பார்வை யுடையவள்.

கருணுகரம்பிள்ளை மேலும் கிருஷ்ணுராவையும் ஜகநாதனையும் நோக்கி "இந்த அம்மாள் துர்க்கையப்பிள்ளையின் முகக்கிய காரியஸ்தரான மதுரநாயகம் பிள்ளேயின் சிநேகி; இந்த அம்மாளுக்குத் தமது பெயர் எங்கே பகிரங்கத்திற்கு இழுக்கப்படுமோ வென்று மிக்க பீதியுண்டாயிருக்கிறது" என்ருர்.

அம்மாது "அய்யா! விபரீதம் விபரீதம். மற்ற எதைப்

பற்றியும் எனக்கு அவசியமேயில்லை. என் கௌரவம், இச்சங்கதியில் என் பெயர் கலக்கப்பட்டால், அய்யோ! என் கௌரவமே யடியோடு போய்விடும். ஆம் ஆம் இச் சங்கதியை நான் கேட்டதே எனக்குண்டான திகிலுக்கு அளவேயில்லை. கருணாகரம்பிள்ளையவாள்! உடனே தங் கள் நினைப்புண்டாயிற்று. நான் துரிதமாகப் புறப்பட் டேன். தாங்கள் என்னை யிந்த ஆபத்தினின்றும் காப் பாற்ற ஏதேனுமொரு மார்க்கம் இருக்கும். தாங்கள் தங் கள் அதிகாரத்தை யுபயோகிக்காமலே இதைச் செய்ய ஏதேனும் மார்க்கமிருக்கும்" என்றாள்.

துரைத்தன வக்கீலாகிய கருணாகரம் பிள்ளை "ஓ உலகாம்பாள்? நான் அந்தக் கள்ள டெலிபோனை யங்கு வைக்கவில்லையென்று பன்முறை யுனக்குக் கூறினேன்" என்றார். அம்மாது "ஆம் ஆம். ஆயினும் நீர் ஏதேனும் செய்பலாகும்; செய்யமாட்டீரா?" என்றாள்.

அவள் அச்சமயம் கூறியதால், அவ்வாறு கூற அவ ளுக்குச் சுதந்தரம் இருப்பதுபோல் தோன்றியது. கருணா கரம்பிள்ளை பிரியத்தோடு "என்னால் கூடிய யாவும் நான் செய்வேன். சத்தியமாய்க் கூறுகிறேன். உன் பெயரைக் காப்பாற்றும் மார்க்கம் என்னாலான வரையிற் செய்வேன். ஆனால்..." என்று கூறிவிட்டு விழித்தார்.

கிருஷ்ணராவ் நேராக "இப்போது கள்ள டெலி போன் வைத்தவன் என்ன சமாசாரத்தை யறிந்து கொண் டான்?" என்று கேட்டுவிட்டு உலகாம்பாள் முகத்தை யுன்னிப்பாய் நோக்கினான்.

உலகாம்பாள் மனக்கலக்கத்தோடு, "ஏன்? ஒரு பெரிய விருந்து நடந்தது. இரவு துர்க்கையப் பிள்ளை ஐந்தாவது வீதியிலுள்ள தமது விருந்து மண்டபத்தில் ஒரு விருந்து வைத்தார். மதுரநாயகம்பிள்ளை யென்னை

யங்கு அழைத்துச் சென்றார். ஓ! இன்னும் அனேகர் அங்கு வந்திருந்தார்கள்'' என்று கூறியதும் சம்பாஷணையைத் தட்டென்று நிறுத்தி விட்டாள்.

கிருஷ்ணராவ் சட்டென்று "ஆம். அங்கு யாரார் வந்திருந்தார்கள்?'' என்றான். உலகாம்பாள் அதற்குள் எச்சரிக்கையாய் விட்டாள். அவள் துர்க்கையப்பிள்ளை நடத்தும் மர்மமான விருந்துகளில் ஒன்றுக்குப் போய்விட்டாள். அங்குச் சென்றிருந்ததாக வெளிப்பட்டால் அவளுக்கு மிக்க அவமானம் நேரிடும். ஆகையால் அந்த அவமானம் தனக்கு வராதபடி தன் பெயர் வெளிவராமல் காப்பாற்றிக்கொள்ளவேண்டுமென்ற ஒரே யெண்ணத்தோடு தான் அவள் கருணாகரம் பிள்ளையிடம் வந்தாள். அதாவது தன் வரையில் காப்பாற்றிக்கொள்ளும் எண்ணத்தோடேயே வந்தாள்.

கிருஷ்ணராவ் வேறு யார் அங்கு வந்திருந்தார்கள் என்று கேட்டதே, அவள் சற்று முகம் சிவந்து "உண்மையில் நான் கூறமுடியாது. அங்கு வந்திருந்தவர்கள் இன்னார் என்றாவது, அங்கு நடந்த விஷயம் இன்னதென்றாவது நான் கூறவே கூடாது. அய்யோ கடவுளே! விஷயங்கள் இப்போதிருக்கிற மாதிரியே மிக்க அபாயகரமானது. அந்தோ! இந்த விஷயத்தில் அதிலும் இராஜாங்க சம்பந்தமாய் என் பெயர் வெளியிலிழுக்கப்பட்டால், என்னைப் பற்றி எல்லாவிதமான பொய்க்கதைகளும்கூறப்பட்டால்... கடவுளே! கடவுளே! ஓ! தாங்கள் தான் என்னைக் காப்பாற்றவேண்டும்'' என்று கருணாகரம் பிள்ளையை நோக்கிக் கூறினாள்.

கிருஷ்ணராவ் "அங்கு கள்ளத்தனமான டெலிபோன் வைக்கப்பட்டிருந்ததை நீங்கள் எப்படிக் கண்டு பிடித்தீர்கள்?'' என்று கேட்டான்.

ஆனால் அவள் நேராய் விடையளிக்கப் பிரியப்படாமல், "ஏன்? நான் அது சாதாரணமான சினேகிதர்கள் விருந்து என்று நினைத்தேன். மதுரநாயகம் பிள்ளையப்படித்தான் எனக்குக் கூறினார். அன்னியர் அதில் சிரத்தையுடையவர்களாக விருக்கிறார்களென்றாவது, இன்னார் அங்கு வந்திருக்கிறார்களென்றாவது, அங்கு இன்னது நடக்கப் போகிறதென்றாவது எனக்குத் தெரியாது. இன்று காலை ஒரு நண்பர் என்னிடம் வந்து சம்பாஷித்தார். அதனால் அன்னியர் அதில் சிரத்தை யுடையவர்களாகவிருந்தார்களென்றும் அதிக சங்கதி வெளியாருக்குத் தெரிந்து விட்டதென்றும் அறியலானேன்" என்று கூறி விட்டுச் சற்று நின்று, பிறகு கேள்விக்கு இடந்தரலாகாதென்று கருதியவள்போல், "நானே யதைப்பற்றிச் சிந்திக்கத் தொடங்கினேன். நான் அதைப்பற்றி சிந்திக்கச் சிந்திக்க அன்னியர் எப்படி யிதையறிந்தார்களென்பது எனக்குப் பெரிய வியப்பாயிற்று. இது எப்படி வெளியிற் சென்றது என்பதைப்பற்றி நான் சிந்திக்கலானேன். ஏனெனில் அந்த விஷயம் முழுமையும் மிக்க இரகசியமானது. நான் அதைப்பற்றி மதுரைநாயகம் பிள்ளையைக் கேட்டேன். அவர் துர்க்கையப்பிள்ளையிடம் கூறினார். துர்க்கையப் பிள்ளை யுடனே சிந்தித்து இதில் ஏதோ சூதிருக்கவேண்டுமென்று அறையின் உட்பக்கமும் வெளிப்பக்கமும் சோதனை செய்யத் தொடங்கினார். சுவரில் இரகசியமாக மறைத்து வைக்கப்பட்ட ஒரு டெலிபோன் அகப்பட்டது" என்று கூறி விட்டுப் பிறகு கருணாகரம்பிள்ளையை நோக்கி ஆளை மயக்கும் பார்வையோடு, "இதற்குமேல் நான் கூற முடியாது. துர்க்கையப் பிள்ளையையும் மதுரை நாயகம் பிள்ளையையும் காப்பாற்றும்படி நான் உம்மை கேட்கலாகாது. அவர்கள் உமது விரோதிகள். ஆனால் கருண

கரம்பிள்ளை. நான் உமக்கு ஒரு தீங்கும் செய்யவில்லை. இதில் என்னைப்பற்றிய விஷயம் எவ்வளவிருக்கிறதோ? அது வரையில் தாங்கள் மறைத்துவிடவேண்டும். அய்யோ அது என் பெயரை யழித்துவிடும்—'' என்றாள். அதோடு தன் பேச்சைத் தட்டென்று நிறுத்தி விட்டாள்.

அவள் தன் கணவனுக்காகப் பீதியடைந்தாள். மாரப்பன் என்ற அவன் நகரில் நல்ல பெயருடையவனல்ல. ஆயினும் தன் மனைவியின் பெயர் அகௌரவத்தோடு வெளி வருவதாயின் அவன் சகிக்கக் கூடியவனல்ல. அதனாற்றான் அவள் மிகவும் நடுங்கி விட்டாள்.

கருணாகரம் பிள்ளை ஏதோ ஒரு காரணத்தால் அவளுடைய மனோவியாகூலத்தை ஒருவாறு அறிந்துகொண்டார் போல் தோன்றினர். அவர் உலகாம்பாளை நோக்கி "நான் இதில் எவ்விதமாகவும் சம்பந்தப்பட்டிருக்கவில்லையென்று மறுபடியும் கூறவேண்டுமோ? நான் கிருஷ்ணாரா வை வரும்படி கோரிக்கொண்டேன்; அதோடு''—என்பதற்குள்,

உலகாம்பாள் அவரை நேராய் உற்று நோக்கி, சத்தியமாய் உமக்கு அதில் ஒரு சம்பந்தமுமில்லை?'' என்றாள்.

கருணாகரம்பிள்ளை:—"சத்தியமாய் இந்த விவகாரத்தில் எனக்கு ஒரு சம்பந்தமுமில்லை'' என்றார்.

இதைக்கேட்டதே அம்மாது திப்பிரமை யடைந்து விட்டாள். இதுகாறும் அவள் கருணாகரம் பிள்ளை தான் அந்த இரகசியத்தை யறிந்துகொண்டிருப்பவர்; ஆதலால் இவரே-இவர் ஒருவரே நம்மை யிந்த ஆபத்திலிருந்து காப்பாற்றுவார் என்று எண்ணியிருந்தாள். அதனால் கருணாகரம் பிள்ளை மேற்கண்டவாறு கூறியதைக் கேட்டதேயவள் முகம் வெளுத்துவிட்டது. அவள் பேசாமல் எழுந்து விட்டாள். பாதி வெறுப்போடும், பாதி திகி

லோடும் மிக்க கலவரத்தோடு நின்ருள். அவளின் உதடுகள் துடித்தன. கண்களில் நீர் ததும்பியது. ஏனெனில் இப்போது தன் நடக்கையால் தன்னைக் காப்பாற்றிக் கொள்வதற்குப் பதிலாக யாரிடத்தில் தன் இரகசியத்தைக் கூறலாகாதோ அந்த ஆளிடமே போய் அதைக்கூறி விட்டதாக உணர்ந்தாள். வெளியாட்களிடம் அதைக் கூறியதால் தன் ஆபத்தை யதிகப்படுத்திக்கொண்டதாக முடிந்ததே யென்று அவள் புத்தியிற் பட்டது.

கருணாகரம்பிள்ளையும் எழுந்து மற்றவர்களுக்குக் கேட்காதபடி தாழ்ந்த குரலாய் அவளுக்குத் தேறுதல் மொழிகள் கூறினர்.

உலகாம்பாள் கலவரத்தால் பகிரங்கமான வாயிற்படியை நோக்கிச் சென்ருள். கருணாகரம் பிள்ளை பக்குவமாய் அவளுக்குத் தேறுதல் கூறிக்கொண்டே அவள் தோளைப்பற்றியபடி வெளியறையிலுள்ள பத்திரிகையாட்கள் முதலியவர்கள் இருக்கும் வழியைவிட்டு இரகசியமான ஒரு வழியாக அவளை அழைத்துச் சென்ருர்.

ஜகநாதனுக்கு அச்சங்கதி யின்னதென்று ஒன்றும் விளங்கவில்லை; ஆனல் அவன் கிருஷ்ணராவின் பார்வை மட்டும் கருணாகரம் பிள்ளையின் நடக்கையின் மேலேயே யிருக்கிற தென்பதைக் கவனித்தான். சற்றுநேரம் கழித்துக் கருணாகரம்பிள்ளை திரும்பிவந்தபோது, கிருஷ்ணராவ் அவர் முகத்தைக் குறிப்பாய்ப் பார்த்துக்கொண்டே "இம்மாது நீர்தான் அந்த இரகசியத்தைக் கிரகித்துக் கொண்டீரென்று கருதி யும்மிடம் வந்தாளோ, அல்லது இது வேறு ஏதோ காரணமாகச் செய்த ஜாலமோ?" என்று கேட்டான்.

கருணாகரம்பிள்ளை:—"இல்லையில்லை. அவள் கூறியவரையில்

யாவும் உண்மையாகவே கூறியிருக்கிறுள். சூது ஒன்றுமேயில்லை. நான் அப்படி நினைக்கவில்லை" என்ருர்.

கிருஷ்ணுராவ்:—"ஆனல் உண்மையில் யார் சுவரில் இரகசியமாக டெலிபோனை யமைத்தது? . தாங்களா?" என்ருன்.

கருணுகரம் பிள்ளை அவசரத்தோடு "இல்லை யில்லை. நான் வைத்திருந்தால் மிக்க சந்தோஷமடைவேன். உண்மையில் யார் வைத்தார்க ளென்பது எனக்கு விளங்கவில்லை - யாருக்கும் தெரியவில்லையென்றே தோன்றுகிறது. ஆனல் நான் யுக்தியாய் உத்தேசிக்கக் கூடுமென்று நினைக்கிறேன்" என்ருர்.

கிருஷ்ணுராவ் ஒன்றும் கூருமல் அப்புறம் கூறும் என்பவன்போல் தலையசைத்தான். கருணுகரம்பிள்ளை உறுத்தும் வண்ணமாய் "அதைச் செய்தது இலக்ஷ்மணசாமியும் அவன் கட்சியைச்சேர்ந்த வடக்குவீதிக் கூட்டமுமாகவிருக்கவேண்டு மென்று நான் நினைக்கிறேன்" என்ருர்.

கிருஷ்ணுராவின் மனம் துரிதமாக வேலைசெய்யத் தொடங்கியது. அவன் "இலக்ஷ்மணசாமி! என் இரத்தினுபாய் அவனிடம் தான் டெலிபோன் முதலிய வேலை செய்துகொண் டிருந்தாள். நீர் என் அவன்மேல் சந்தேகம்கொள்கிறீர்?" என்ருன்.

கிருஷ்ணுராவ் அந்த விஷயத்தை இரத்தினுபாய் காணுமற்போன சங்கதியோடு உடனே சம்பந்தப்படுத்திக் கொண்டதை யறிந்ததும் கருணுகரம்பிள்ளை வியப்படைந்து, இதுகாறும் காட்டாத மனத்துடிப்போடு, தனது கரத்தை யாத்திரத்தோடு மேஜைமேலடித்து,

"ஏனெனில், தர்க்கையப்பிள்ளையின் வரும்படியில் அவர்களுக்குப் பாகம் கொடுக்கப்படவில்லை. அவர்களுக்குப் பெரும்பாலும் மனவெரிச்ச லுண்டாய் விட்டிருக்கும்.

ஆகையால் தூர்க்கையப்பிள்ளையையாவது அவருக்கு அபிமானமுள்ள யாரையாவது இக்கட்டில் சிக்கும்படி செய்து விட்டால் அவர் தங்களுக்கும் பாகமளிப்பார் என்று கருதியிருக்கிறார்கள்." என்று கூறிக்கொண்டே கிருஷ்ணராவையும் ஜகநாதனையும் மாறிமாறி நோக்கினார். தமது உத்தேசம் அவர்களுக்கு எப்படித் தோன்றுகிறது என்று நோக்கினார்.

3—வது அத்தியாயம்.

கருணாகரம்பிள்ளை கூறியவிஷயம் ஜகநாதன் மனதில் உறுத்தியது. இலக்ஷ்மணசாமி வடக்குவீதியி லுள்ளவர்களின் தரகாளி யென்பதும், நல்ல இலாபம் கிடைக்கக்கூடிய பூஸ்திதி விற்கிரயம், அடகு முதலியவைகளில் பேரம்செய்பவன் என்பதும் அவனுக்கு நன்றாகத்தெரியும்.

கிருஷ்ணராவ் அதைப்பற்றி நேராக ஒரு அபிப்பிராயமும் கூறவில்லை. ஆனால் "இது எத்தகைய விஷயம்?" என்று மட்டும் கேட்டான்.

கருணாகரம்பிள்ளை "உலகாம்பாள் கூறியதால், அந்தக் கள்ள டெலிபோன் சமாசாரம், டெலிபோன் சமாசாரம் எழுதும் ஆளால் எடுத்துக் கொள்ளப்பட்ட தென்றும், அத்தகைய சங்கதிகளெல்லாம் கறுப்புத்தோலில் கட்டப்பட்ட ஒரு புத்தகமாய்ச் சேர்க்கப்பட் டிருக்கின்றனவென்றும் எனக்குத் தெரிகின்றன. ஓ! அப்புத்தகத்தில் என்ன இருக்கிற தென்பதை யறியத் தூர்க்கையன் எவ்வளவு வேண்டுமாயினும் கொடுப்பான். அத்தகைய சங்கதிகள் வெளியாவதைவிட அவன் இலக்ஷ்மணசாமியோடு சமாதானம் செய்து கொண்டாலும் செய்துகொள்வான்." என்றார்.

கிருஷ்ணராவ் ஒன்றும் கூறவில்லை, அவன் பேசாமல் கருணாகரம் பிள்ளை கூறியவற்றை யெல்லாம் கிரகித்துக் கொண்டிருந்தான்.

கருணாகரம்பிள்ளை மறுபடி கூறத்தொடங்கி முன்னும் பின்னும் காரியாலயத்தில் உலவிக்கொண்டும் சாளரத்தில் பார்த்துக் கொண்டும், "இந்த இரகசியசங்கதி நகரத்தில் எங்கோ இருக்கிறது. ஆ! நான்மட்டும் அதைக் கைப் பற்றுவதாயின் எனக்கும் துர்க்கையனுக்கும் இருக்கும் போராட்டத்தில் நான் ஜெயமடைந்து விடுவேன். உலகாம் பாள் தன் தப்பிதத்திற்காகக் கஷ்டப்படவேண்டியிராது" என்றார்.

கிருஷ்ணராவ் அவரை யின்னும் கிளற முயல வில்லை. அவன் இதன் விசேஷத்தைப்பற்றிக் கருதிக் கொண்டிருந்தான். இது இராஜாங்க சம்பந்தமான போராட்டம். கிருஷ்ணராவ் கருணாகரம் பிள்ளையை நோக்கி, "இலக்ஷ்மணசாமிப்பிள்ளை இதன் அந்தரங்கத்தில் பிரவேசித்திருக்கிறனென்று நீர் கருதவில்லையோ?" என்றான்.

கருணாகரம் பிள்ளை:—இல்லை; இன்னுமில்லை.

ஜெகநாதன்:—"அப்படியாயின் தாங்கள் அவனையாவது அவனிடம் நெருங்கியுள்ள வேறு யாரையாவது கண்டு இதைப்பற்றிய சங்கதியைக் கிரகிக்க..." என்பதற்குள்,

கருணாகரம் பிள்ளை:—"துர்க்கையனுடைய விருந்து மண்டபத்தில் நடந்த விவகாரம் இலக்ஷ்மணசாமி மேலும் அவன் கூட்டத்தாரிற் சிலர் மேலும் குற்றம் சாட்டத்தக்கதாயுமிருக்கலாம்; இல்லாமலுமிருக்கலாம். அதின் அளவிலும் மாதிரியிலும் வித்தியாசமிருக்கும். அவ்வளவே. இது இலக்ஷ்மணசாமியின் வேலைத்தாங்

களிலொன்று. அவனுக்காவது துர்க்கையனுக்காவது சண்டையிட்டுக்கொள்ள வென்னமோ பிரியமில்லை. இருவருக்கும் அவ்விஷயத்தில் பயமே. இலக்ஷ்மண சாமிக்கு துர்க்கையனுக்குச் சமமாக இருக்கவேண்டு மென்பது எண்ணம். அவ்வளவே அவனுக்கு வேண்டியது. ஸ்திரீகளில் சிலர் அளவு கடந்து பேசா விட்டால் இந்தக் கறுப்புப் புத்தகத்தைப்பற்றி நமக் கொன்றுமே தெரியாது. உலகாம்பாள் நானே அந்தக் கள்ள டெலிபோனை வைத்தவன் என்று எண்ணிக்கொண்டு பேச்சை விட்டு விட்டாள்" என்றார். மேலும் அவருக்கு மனத்துடிப்பு மறுபடி வர வர அதிகமாய் விட்டது. அவர் "ஆ—அச்சமா சாரம் எங்கோ இருக்கிறது. அது மட்டும் என்னிடம் அகப்பட்டால்—ஆ கிருஷ்ணராவ்! இப்போது அவய விகளைத் தேர்ந்தெடுக்கும் சமயம். இச்சமயத்தில் அது என்னிடம் சிக்கினல்...." என்றார்.

கிருஷ்ணராவ்:—அப்புத்தகத்தில் விசேஷமாக என்ன விருக்கிறதென்று கருதுகிறீர்?

கருணகரம் பிள்ளை:—"ஹோ ஏறக்குறைய எல்லாமே இருக்கும். திருட்டாந்தமாய்க் கூறுகிறேன். துர்க்கை யன் புதிதாக ஒரு நகர அமைப்பு ஏற்பாட்டைப் பற்றி சூழ்ச்சி செய்திருக்கிறன். அவ்விஷயத்தில் நல்ல அனுபோகமுடையவர்கள் உதவியைக்கொண்டு அதைச் செய்திருக்கிறன். இலஷ்மணசாமிக்கும் அவன் கட்சியாருக்கும் அது தெரியும்" என்றார்.

கருணகரம் பிள்ளையும் கிருஷ்ணராவும் அதைப்பற்றிச் சம்பாஷித்துக்கொண்டிருக்கையில் ஜகநாதன் தனக்குள் சிந்திக்கலானன். பத்திரிகைக் காரியாலயத்திலுள்ள

வர்களில் தனக்கு அறிமுகமானவர்கள் இரகசியமாய்ப் பேசிக்கொள்வதைத் தான் கேட்ட வரையில் இலக்ஷ்மண சாமியின் கட்சியைச் சேர்ந்த சிறு சிறு கூட்டத்தார் அசாத்தியப் பேர்வழிகள் என்பதும், சிந்திக்கச் சிந்திக்க இரத்னபாயின் விவகாரம் இதில் எப்படியாவது சம்பந்தப் பட்டிருக்கலாகும் என்பதும் அவனுக்குப் புலப்பட்டன. அவன் கருணாகரம் பிள்ளையை நோக்கி "மற்றவர்களைப் போல் துர்க்கையனும் மதுரநாயகம்பிள்ளையும் அப்புத்த கத்தைத் தேடிக்கொண்டிருக்கிறார்களென்பது உமக்குத் தோன்றுகிறதா?" என்று வினவினன்.

கருணாகரம் பிள்ளை:—"அங்கு நடக்கும் சில விருந்துகளைப் பற்றி நீ கேள்விப்பட்டேயிருக்கிறாய். துர்க்கையப் பிள்ளை சில பிரதானமான லாயர்கள், சட்டசபை யவயவிகள், மந்திரிமார்கள் இப்படிப்பட்டவர்களைக் கூட அங்கு விருந்திற் கழைத்திருக்கிறான். அவர்கள் கூட்டத்தில் தன்னைப் போலவே எதற்கு மஞ்சாத துணிகரமுடைய சில ஸ்திரீகளை வரவழைத்துச் சேர்க்கிறான். அதற்குமேல் நடக்கும் விஷயங்களை நீயே யூகித்துக் கொள்ளலாம். பாபம்! இந்த உல காம்பாளை யவர்கள் காரியங்களுக்கு எப்படி அனு கூலமோ அப்படியெல்லாம் ஆட்டி வைப்பார்கள்" என்றார்.

ஜகநாதனுக்குத் தெரிந்தவரையில், கருணாகரம்பிள்ளை கூறியதற்கு மாறாக உலகாம்பாள் தன்னைத்தான் காப்பாற் றிக்கொள்ளக்கூடியவள் என்பதே அவன் அபிப்பிராயம். ஆயினும் அவன் ஒன்றும் பேசவில்லை. கருணாகரம் பிள்ளை சாளரத்தினெதிரில் நின்று நகர சிறைச்சாலைக்கும் தம் வீட்டிற்குமிடையிலுள்ள பாலத்தை நோக்கிக்கொண்டிருந் தார். அவர் சிந்தித்துக்கொண்டே "அக்கறுப்புப் புத்த

கத்தில் எத்தகைய சமாசாரம் இருக்கவேண்டும்! நான் மட்டும் அந்த மதுரநாயகத்தை வசப்படுத்திக்கொள்வதாயின் மிக்க சந்தோஷம்" என்று கூறி யிவர்கள் பக்கம் திரும்பினர்.

முன் கூறப்பட்டதுபோல் மதுரநாயகம்பிள்ளை என்பவன் துர்க்கையனுக்கு வலது கரம் போன்றவன். எதற்கும் துணிந்த இராஜ தந்திரி. எவ்விதமாகவோ தான் தலைமை வகித்திருக்கும் எல்லைக்குள் தனக்கு எதிரியாவது போட்டியாவது இல்லாமல் அவற்றை அடக்கி விட்டான். பத்திரிகைக்குச் சமாசாரம் சேகரம் செய்யும் வேலையாய் ஜெகநாதன் அப்போதைக்கப்போது அவனிடம் சென்றிருக்கிறன். அவசியமான போதெல்லாம் அவன் சமாசாரம் பத்திரிகைக்குக் கொடுப்பதோடு நல்ல குணமுடையவனுகவே காணப்பட்டான்.

பன்முறை சீர்திருத்தங்கள் நேர்ந்தபோதிலும் அத்தகைய ஆசாமியால் தான் அக்கட்சி உடையாமலேயிருந்து வந்தது. மதுரநாயகம் பிள்ளை தன் வட்டத்திலுள்ள ஜனங்களின் சுபாவத்தை நன்றாக அறிந்து கொண்டிருந்தான். எந்த வேளையிலும் துரைத்தன சங்கதிகளையே பேசிக்கொண்டிருப்பான். தனக்குச் சந்தர்ப்பம் நேரிடும் போதெல்லாம் ஜனங்களில் உதவி வேண்டியவர்களுக்கெல்லாம் உதவிசெய்வான்.

ஆயினும் ஜெகநாதனும், கிருஷ்ணராவும் குற்றங்களைக் கண்டு பிடிக்க வெளிச்செல்லும்போது, இச்சங்கங்கள் வெளித்தோற்றத்திற்கு மிக்க தரும கைங்கரியங்களைச் செய்வனபோலவும், நீதி புகட்டுவனபோலவும் தோன்றினும், அந்தரங்கத்தில் அக்கிரமமும் அயோக்கியதையும் நிறைந்துள்ளனவென்பதை அறிந்து கொண்டார்கள். கருணாகரம் பிரபு இராஜாங்கக் கட்சியில் தாம் ஜயமடை

யும்பொருட்டு அக்கறுப்புப் புத்தகத்தைக் கைப்பற்றக் கருதினர். தூர்க்கையன் தன் இரகசியங்கள் வெளிவராது மறைத்து விடவும் தனக்கும் தன் நண்பனுகிய மதுரநாய கம் பிள்ளைக்கும் தீங்கு நேரிடாது தடுப்பதற்கும் அப்புத் தகத்தைக் கண்டு பிடிக்க முயன்றான். உலகாம்பாள் தன் பெயர் வெளியில் வராமலிருக்கவும் தனக்கு அவமான முண்டாகாதிருக்கவும் தன்னைக் காப்பாற்றிக்கொள்ள முயன்றாள்.

ஆகையால் அவரவர்கள் தங்கள் தங்கள் காரியம் நிறைவேறவே கருதுகிறார்கள். ஆனால் எல்லாருடைய நோக்கமும் அக்கறுப்புப் புத்தகம் ஒன்றின்மேலேயே யிருக்கிறது. கடைசியில் கருணாகரம் பிள்ளை சாளரத்தின் பக்கமிருந்து கிருஷ்ணராவும் ஜகநாதனும் இருக்கும் பக் கம் திரும்பி "அப்புத்தகத்திற்காக நான் உலகு முழுதும் சுற்றவேண்டுமாயினும் சுற்றித் தீர்வேன்" என்றார்.

கிருஷ்ணராவ் உடனே எழுந்து நின்று சாந்தமாகவே "அப்படியாயின் நீர் என்மேல் நம்பிக்கை வைக்கலாம்" என்றான்.

கருணாகரம் பிள்ளை யுடனே சந்தோஷமாய் இருவர் களையும் பற்றிக்கொண்டு "ஆ! நீங்கள என் பட்சத்தில் சேர்வீர்களென்றே நான் நம்பினேன்" என்றார்.

* * * *

அன்றிரவு கிருஷ்ணராவும் ஜகநாதனும் தங்கள் வாச ஸ்தலத்திற்குச் செல்ல நெடுநேரமாய் விட்டது. மறுநாள் காலைவரையில் இதுகாறும் தெரிந்திருப்பதைத்தவிர வேறு புதிதாக ஒரு சங்கதியும் அவர்களுக்குக் கிடைக்கவில்லை. மறுநாட் காலை யிருவரும் போஜனம்செய்தபின் கிருஷ்ண ராவ் பத்திரிகையை வாசித்துகொண் டிருந்தான்.

அப்படியிருந்த அவன், திடீலென்று " ஜெகநாதம்!

நீ என்னவென்று நினைக்கிறாய்? இலக்ஷ்மணசாமியின் காரியாலயத்திலேயே ஒருகளவு நடந்திருக்கிறது'' என்றான்.

ஜெகநாதன் ஆத்திரத்தோடு எழுந்து ஓடிப்போய்ப் பத்திரிகையைப் பார்த்தான். உண்மையாகவே அதில் கீழ்க்கண்ட சமாசாரம் இருந்தது:—

"வடக்கு வீதியிலுள்ள ஒரு காரியாலத்தில்
இரும்புப்பெட்டி களவு.

வடக்கு வீதியிலுள்ள தரகர்களாகிய இலக்ஷ்மணசாமிப்பிள்ளை, வில்வநாதம்பிள்ளை இவர்கள் சங்கத்தில் இருந்த இரும்புப்பெட்டி உடைத்துக் களவாடப் பட்டது.

இதுகாறும் நடக்காத அபூர்வமான களவுகளில் இது ஒன்று. அக்காரியாலயம் வழக்கப்படி மாலையில் மூடப்படும்வேளை ஐந்துமணி. அதற்கும் எட்டுமணிக்குமிடையில் களவு நடந்திருக்கிறது. இலக்ஷ்மணசாமிப்பிள்ளை காரியாலயத்தை மூடிக்கொண்டு சென்றபிறகு போசனம் செய்துவிட்டுச் சில அவசரவேலைகளைச் செய்வதற்காக எட்டுமணிக்குக் காரியாலயத்திற்கு வந்தார். அவர் அங்குவந்தபோது கதவு உடைத்துத் திறக்கப்பட்டிருந்தது. உள்ளே காரியாலயத்தில் இருள் சூழ்ந்திருந்தது. பிறகு அவர் விளக்கையேற்றிப் பார்த்தபோது இரும்புப் பெட்டி களவாடப்பட் டிருந்ததைக் கண்டார்.

அப்பெட்டி எவ்வாறு திறக்கப்பட்டது என்பதைப் பற்றியொன்றும் கூறப்படவில்லை. ஆயினும் அது மிக்க அபூர்வமான விதமாகவே செய்யப்பட்டதென்று தெரிகிறது. இதுவரையில் விவரம் ஒன்றும் வெளியிடப்படவில்லை. போலீஸாருக்குச் சங்கதி நெடுநேரம் சென்றபிறகே யறிவிக்கப்பட்டது.

பத்திரிகையாட்கள் இலக்ஷ்மணசாமிப் பிள்ளையைக்

கண்டு விசாரித்தபோது அவர் "அப்படி மதிப்புள்ள சொத்து ஒன்றும் களவுபோகவில்லை" யென்றும் "அக் களவால் நஷ்டம் ஒன்றும் நேரிடவில்லை" யென்றும் கூறினர். இலக்ஷ்மணசாமிப்பிள்ளையிடமிருந்த இலிகிதர்களில் இரத்னபா யென்பவள் ஒருத்தியிருந்தாள். அவள் அவருக்கு அந்தரங்கக் காரியதரிசியாகவு மிருந்தாள். அவள் திடீலென்று காணமற் போய்விட்டாள். அவ்விஷயம் எங்கும் கிளர்ச்சியை யுண்டாக்கியது. அவள் காணமற் போனதற்கும் இதற்கும் ஏதேனும் சம்பந்தம் இருக்கிறதோ என்பது விளங்கவில்லை."

ஜகநாதன் இதை வாசித்து முடிந்தபின் கிருஷ்ணராவ், "இயற்கையாகவே இலக்ஷ்மணசாமி இதைப் போலீஸாருக்கு அறிவிக்கமாட்டான்; இதில் அந்த இரத்னபாய் விஷயம் சம்பந்தப்பட்டிருந்தால்—ஆனல், இதில் அது சம்பந்தப்பட் டிருக்கிற தென்று நான் நிச்சயமாகக் கூறுவேன்." என்றான்.

ஜெகநாதன்:—"அப்படி யிருந்தால் இது மிக்க அபூர்வமான சங்கதியாகவே யிருக்க வேண்டும். இதைக் கண்டு பிடிக்க ஏதேனும் ஒருவழி யிருக்கவே வேண்டு மல்லவா ? இந்த இரத்னபாயைப் பற்றிய விஷயம் மிக்க அபூர்வமே." என்றான்,

கிருஷ்ணராவ் சற்று நேரம் ஏதோ தனக்குள் ஆலோசித்துக்கொண் டிருந்து, "நாம் இதற்குள் பகிரங்கமாய் இதில் வெளிவரலாகாது. ஆனல் இலக்ஷ்மண சாமியின் காரியாலயத்தில் என்ன நடந்ததென்பதை யறிவது மிக்க அவசியமாகும். அதனல் அநேக விஷயங்களை யறியலாம். என்னேடுகூட நீயும் பத்திரிகைக்குச் சமாசாரம் சேகரம் செய்பவன் போலவே வருவதற்கு ஏதேனும் ஆக்ஷேபனை யுண்டோ ?" என்றான்.

ஜேகநாதன்:—“ ஒன்றுமேயில்லை ” என்றான்.

கிருஷ்ணராவ் ஒரு எந்திரத்தைத் தன்கூட எடுத்துக் கொண்டான். அது இன்னதென்று ஜெகநாதனுக்குத் தெரியவில்லை. கிருஷ்ணராவ் அந்த எந்திரத்தைப் பிரித்து இரண்டு சிப்பங்களாகச் செய்துவிட்டான். அதனால் இருவரும் சுலபமாக அதை யெடுத்துக்கொண்டு புறப்பட்டார்கள். இலக்ஷ்மணசாமியின் காரியாலயம் திறக்கப்படும் சமயத்திற்குச் சரியாக இவர்களும் அங்குப்போய்ச் சேர்ந்தார்கள்.

இலக்ஷ்மணசாமிப் பிள்ளை நெட்டையான மெலிந்த மனிதனைக் காணப்பட்டான். நடுவயதுடையவன். அவன் இன்ன வேலைசெய்பவன் என்பதையும், இப்படிப் பட்டவனென்பதையும் ஒருவர் அறிவிக்கவேண்டியதில்லை. அவன் முகத்தையும் மாதிரியையும், உடையணிந்திருக்கும் விதத்தையும் காணும்போதே, அவன் புத்திசாமார்த்தியத்தால் ஜீவனம் செய்பவனென்றும் அத்தகைய தொழிலையே விருப்பத்தோடும் சந்தோஷத்தோடும் செய்பவனென்றும் புத்திசாலி யறிந்துகொள்ளலாம்.

முதலில் ஜெகநாதன், தானும் தன் கூடவந்திருக்கும் நண்பனும் பத்திரிகைக்குச் சமாசாரம் அனுப்புவோர்களென்று இலக்ஷ்மணசாமியிடம் கூறினன். கிருஷ்ணராவ் இலக்ஷ்மணசாமிப்பிள்ளையை நோக்கி, “நாங்கள், புதிதாய் வரவழைக்கப்பட்ட ஒரு எந்திரத்தைப் பற்றிப் பத்திரிகையில் எழுதவேண்டும். அந்த எந்திரம் மிக்க சாமார்த்தியத்தோடு ஒரு எந்திரசாத்திர பண்டிதரால் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டது. அந்த எந்திரத்தால், கள்ளர் ஒரு கதவிலுள்ள பூட்டையோ, ஒரு பெட்டியையோ கள்ள ஆயுதங்களைக்கொண்டு திறந்துவிட்டால், அதற்கு எத்தகைய ஆயுதம், எவ்வளவு பலம் உபயோகிக்கப்

பட்டது என்பது முதலிய பல முக்கியமான உளவுகளை யெல்லாம் கண்டு பிடிக்கலாம். அதன் மூலமாய் அக்காரியத்தைச் செய்தவர் ஒருவரா இருவரா? எத்தகைய பலமுடையவர்கள்? என்ற பல உண்மைகளைக் கண்டு கொள்ளலாம். அந்த எந்திரத்தைப் பற்றிய உண்மைகளைச் சோதிக்காமல் எழுதுவது ஒழுங்கல்ல; அதைச் சோதிக்கச் சந்தர்ப்பம் இதுகாறும் வாய்க்கவில்லை. ஏதேனும் சந்தர்ப்பம் வாய்க்குமென்று நாங்கள் இதுவரையில் எதிர் பார்த்துக்கொண் டிருந்தோம். இப்போது உமது காரியாலயத்தில் நடந்தகளவால் இதில் அந்த எந்திரத்தைச் சோதிக்கச் சந்தர்ப்பம் வாய்க்குமென்றும், தங்களுக்கும் உண்மையான களவு நடந்த மார்க்கத்தை யறிய அனுகூலமாக விருக்குமென்றும் கருதி யிங்கு வந்தோம். இதைச்சோதித்துப் பார்ப்பதில் உமக்கு ஆக்ஷேபனையில்லையென்று நம்புகிறோம்" என்றான்.

இலக்ஷ்மணசாமிப் பிள்ளைக்கு பத்திரிகையில் வெளியான விஷயம் அவர்களை யங்குவரச்செய்தது மனத்திருப்தியை யுண்டாக்கா விடினும், தன் காரியாலயத்தில் நடந்த களவைப்பற்றிப் பேச விருப்பமில்லாவிடினும், அவர்கள் ஏதோ எந்திரத்தைச் சோதனைசெய்யக் கருதுவதைத் தடுப்பது நன்றாயிராதென்று புத்தியிற் புலப்பட்டது. ஆதலின் அவன், "ஆகா! ஒரு ஆக்ஷேபனையுமில்லை" என்றான்.

4—வது அத்தியாயம்

இலக்ஷ்மணசாமிப்பிள்ளை ஆக்ஷேபனையில்லையென்று கூறியதே கிருஷ்ணராவ் "மிக்க வந்தனம், இப்போது இதன் உண்மை வல்லமையை மனதார வெளியிட எங்களுக்கு அனுகூலமாக விருக்கும்" என்று கூறிவிட்டு

அங்கிருந்தமேஜைமேல் இரண்டு மூட்டைகளையும் அவிழ்த்துவைத்து எந்திரத்தின் பல பாகங்களையும் ஒன்றுசேர்த்துப் பிணைத்தான். அதன் பின் அவன் கதவினருகிற் சென்று அதிலுள்ள பூட்டினருகில் உன்னிப்பாய்ப்பார்த்து இலக்ஷ்மணசாமிப்பிள்ளையை நோக்கி "இவை கதவில் உண்டாக்கப்பட்ட அடையாளங்கள் என்று உத்தேசிக்கிறேன்" என்றான்.

இலக்ஷ்மணசாமி:—ஆம்.

கிருஷ்ணராவ்:—நீர் வரும்போது கதவு திறக்கப்பட்டிருந்ததல்லவா?

இலக்ஷ்:—"மூடப்பட்டிருந்தது. நான் எப்போதும் கதவில் தைக்கப்பட்டிருக்கும் பூட்டில் சாவியைப் போடுமுன் கைப்பிடி மரையைத் திருப்பிப்பார்ப்பது வழக்கம். அவ்வாறே திருப்பிய போது, அது திருப்ப முடியாதபடி பிடிப்பாயிராமல் சுலபமாய்த்திரும்பி விட்டது. கதவும் ஒரு கஷ்டமுமின்றி திறந்து கொண்டது" என்று அவர்கள் பத்திரிகையில் கண்ட சமாசாரங்களைக் கூறினன்.

கிருஷ்ணராவ் வார்த்தையாடிக்கொண்டே மெதுவாக இரும்புப் பெட்டியின் எதிரில் போய் நின்றான். அப்பெட்டி பெரிதல்ல; ஆனால் புது மாதிரியாய்ச் செய்யப்பட்டது. கள்ளர் திறக்க முடியாதென்று கருதப்பட்டது. கிருஷ்ணராவ் "ஒன்றும் களவு போகவில்லையென்று கூறுகிறீர்" என்றான்.

இலக்ஷ்மணசாமி:—முக்கியமானது ஒன்றுமில்லை.

கிருஷ்ணராவ் அவனை யுற்றுநோக்கிக்கொண்டேயிருந்தான். அவன் தன்னை ஏமாற்றுகிறான் என்று எண்ணினன். இலக்ஷ்மணசாமியின் முகத்தில் எள்ளளவு கலக்கமாவது விசனமாவது தோன்றவில்லை. ஜகநாதன், கடைசி

யில் ஒரு சமயம் அக்கறுப்புப் புத்தகம் இவனிடமே யிருக்குமோவென்றுகூட எண்ணினன். அப்படிக்கின்றி அது களவுபோயிருந்தால் இவன் அசாத்திய அபிநயக்காரனுகவிருக்கவேண்டுமென்றும் கருதினன்.

கிருஷ்ணராவ் பெட்டியின் சமீபத்தில் சென்று அதை நோக்கினன். அதன் முன்பாகம் உடைக்கப்பட்டதாகவாவது துளைக்கப்பட்டதாகவாவது காணப்படவில்லை. அதில் ஒரு குறிகூட இல்லை. விரற்குறிகூட இல்லையென்று பின்னல் போலீஸார் கூறியதால் தெரிந்தது. ஜகநாதன் "எப்படித்தான் களவு நடந்திருக்கும்?" என்று கேட்க வாய்திறந்தான். அதற்குள் இலக்ஷ்மணசாமி கூறியபடி அங்கிருந்த நாற்காலிமேல் ஏறி நின்று நோக்கிய கிருஷ்ணராவ் ஹா! என்று வியப்பான சத்தமிட்டான். உடனே ஜெகநாதனும் அவ்வாறே ஏறிப்பார்த்தபோது பெட்டியின் உச்சியில், ஒருவன் கையில் ஏதேனுமொரு வஸ்துவை வைத்துக்கொண்டுகூட கையைத் தாராளமாய் நுழைக்கக் கூடிய அவ்வளவு பெரிய துவாரம் இருந்தது. ஜெகநாதனுக்குண்டான வியப்பிற்கு அளவேயில்லை. அவனல் கூடிய வரை யாலோசித்துப் பார்த்தான். அவனுக்கொன்றும் விளங்கவில்லை. எத்தகைய கள்ளனுகவிருந்தாலும் இலக்ஷ்மணசாமி காரியாலயத்தைப் பூட்டிக்கொண்டு சென்று எட்டு மணிக்குத் திரும்பி வருவதற்குள் இடையிலிருந்த இரண்டு மணி நேரத்தில் எஃகில் இவ்வளவு பெரிய துவாரத்தை யெப்படி யுண்டாக்குவான் என்ற சந்தேகத்தால் எவ்வித உத்தேசமும் அவனுக்குப் புலப்படவில்லை. மிக்க நேர்த்தியான அரங்களைக்கொண்டு நல்ல பலசாலி வேலை செய்வதாயினும் அத்தகைய துவாரத்தை யுண்டாக்கப் பல மணிகள் நேரம் செல்லும் என்பதே யவன் உத்தேசம். அச்சமயம் இலக்ஷ்மணசாமியின் முகத்தில் மிக்க அதிசய

மான குறி தோன்றியது. அவன் மனதில் அத்துவாரம் எப்படி யுண்டாக்கப்பட்டது என்பதையறிய மிக்க ஆவல் உண்டாகியிருந்தது. ஆயினும், அவன் அவ்விஷயத்தில் கவலை யிருப்பதாகக் காட்டிக் கொள்ளலாகாதென்று கருதிப் பேசாமலிருந்தான்.

அதைவிட இன்னொரு விஷயம் அவனுக்கும் ஜெகநாதனுக்கும் மிக்க வியப்பை யுண்டாக்கியது. அதாவது கிருஷ்ணராவ் நடந்துகொண்ட மாதிரியே. கிருஷ்ணராவ் அத்துவாரத்தைக் கண்டு முதலில் ஹா என்றானே அவ்வளவேயன்றி மற்றபடி யவ்விஷயத்தில் வியப்பே காட்டவில்லை. அதையொரு சாதாரண சம்பவமாக, அதாவது எவனும் அச்சொல்ப நேரத்தில் அத்தகைய எஃகுத் தகட்டில் அவ்வளவு பெரிய துவாரத்தை யுண்டாக்கிவிட்டு அதன் வழியாகப் பெட்டியிலுள்ளதை யெடுத்துக்கொண்டு போவது சர்வ சாதாரணம் என்றுகருதியவன்போல் நடந்துகொண்டான்.

பிறகு கிருஷ்ணராவ் "இப்போது நாம் முக்கியமாகச் சோதனை செய்யவேண்டியது கதவே, பெட்டியல்ல. கதவின்மேலிருக்கும் குறிகள் உண்மையானவைகளா அல்லது வேலை முடிந்தபின் ஏமாற்றுவதற்காக உண்டாக்கப் பட்டவைகளா என்பதே ஆராயவேண்டும். யாராவது வேறொரு சாவியை யுபயோகித்து அதனால் திறந்துவிட்டிருந்தால்?" என்றான்.

அதைக் கேட்டபோது ஜெகநாதனுக்குப் பல ஆலோசனைகள் தோன்றின. அவன் ஒரு சமயம் இரத்னபாய் விவகாரம் இதோடு சம்பந்தப்பட்டிருக்கிறதோ. இது ஒரு ஸ்திரீயின் வேலை தானோ என்று சிந்தித்தான்.

கிருஷ்ணராவ்:—"அநேகம் பேருக்கு முக்கியமான ஆயுதம் இன்னதென்று தெரியாது. சாதாரணக் கதவுப்

பூட்டும் சாளரங்களின் தாழ்ப்பாள்களும் சரியான ஆயுதத்தின் முன் ஒன்றுக்கும் உதவா. ஒரு சரியான கிளப்பும் ஆயுதத்தால் ஒரு சாதாரண பலமுள்ள கள்ளன் இரண்டு பாரம் பளுவைக் கிளப்பி விடுவான். பூட்டினுலுள்ள பிரயோசனமெல்லாம் கூடி சந்தடி செய்யாமல் களவாட வருபவனைத் தடுக்கும். இக் காலத்திலுள்ள சாத்திரம் கற்ற கள்ளன் திறந்தால் சந்தடியையுண்டாக்கும். எப்படியாயினும் இங்கு வந்தவன் சந்தடி செய்யாமல் ஓடுங்கள்ளனல்ல" என்று கூறிக்கொண்டே தான் கொண்டு வந்த எந்திரத்தை இணைத்துப் பொருந்தினன். இலக்ஷ்மண சாமி மிக்க உன்னிப்பாய்க் கவனித்துக்கொண்டிருந்தான்.

கிருஷ்ணராவ் அந்த எந்திரத்தின் முக்கிய பாகங்களையும் அது வேலை செய்யும் விதத்தையும் விவரித்துக் கூறிச் சோதனை செய்து முடிந்தபின்,

"ஆ! இச்சந்தர்ப்பத்தில் இரண்டு பாரத்திற்கதிகமான பலம் உபயோகிக்கப்பட் டிருக்கிறது. இதைச் செய்தது ஒரு சிறுவனு? ஸ்திரீயா? ஆடவனு? இவர்களுள் எத்தகைய ஆள்? என்று கண்டுபிடிக்க வேண்டுமென்பதே என் எண்ணம். இது சாதாரணமாய் ஒரு கள்ளச்சாவி போட்டுக் கதவைத் திறந்துவிட்ட சமாச்சாரமல்ல. இது ஒரு பெண்பால் செய்ததுமல்ல. இல்லை. ஒரு மனிதன்-நல்ல பலம் பொருந்திய மனிதன், ஆயுதம் கையாடுவதில் நல்ல பழக்கமுடையவன் வேலை." என்றான்.

இதைக் கேட்டபோது இலக்ஷ்மணசாமியின் முகத்தில் ஒருவித திருப்தியான குறி தோன்றியது. அது இரத்னபாய் மேல் சந்தேகம் கொள்ளாதபடி செய்துவிட்டதற்காக ஏற்பட்டதோ, வேறு காரணத்திற்காக ஏற்பட்

டதோ என்பது ஜெகநாதனுக்கு விளங்கவில்லை. கிருஷ்ணு ராவ் பெரிய மர்மமாகத் தோன்றும் இரும்புப் பெட்டியைப் பற்றிய விஷயத்தை முதலில் முக்கியமானதாக எடுத்துக்கொள்ளாமல் இக்கதவு எப்படித் திறக்கப்பட்டதென்பதையே தீர்மானமாகக் கண்டுபிடிக்க முயன்றது ஜெகநாதனுக்கு மிக்க வியப்பாக விருந்தது. அதனுல் அவன் பல கேள்விகளைக் கேட்க உத்தேசித்தான். ஆயினும் மறுபடி யாலோசித்துப் பேசாமலிருந்துவிட்டான்.

கிருஷ்ணுராவ் பின்னும் கதவிலுள்ள குறிகளைச் சோதித்துக்கொண்டே யிருந்தான். அப்போது காரியாலயத்திலுள்ள டெலிபோன் மணி கணகணவென்று சத்தித்தது. அதைக் கேட்டதும் ஒரு வேலைக்காரன் வந்து இலக்ஷ்மணசாமியை யழைத்தான். இலக்ஷ்மணசாமி காரியாலயத்திற்குள் செல்லாமல் வாயிற்படி யருகிலேயே பேசும் குழல் கேட்கும் குழல்களைக் கொண்டுவரச் செய்து பேசத் தொடங்கினுன். அவன் எண்ணம் கிருஷ்ணுராவையும் ஜெகநாதனையும் தன் பார்வையிலேயே வைத்திருக்கவேண்டும் என்பதாகப் புலப்பட்டது. அவன் என்ன காரணத்திற்கு அப்படிச் செய்திருந்தாலும் அதனுல் அவன் பேசுவதை யிவர்கள் கேட்க அனுகூலமாயிருந்தது. ஆனுல் அச்சம்பாஷணையைக் கேட்டபோது இருவரும் மிக்க கஷ்டத்தோடு தங்கள் வியப்பை யடக்கவேண்டி யிருந்தது.

இலக்ஷ்மணசாமி:—"ஹோ-ஆம்-உலகாம்பாள். க்ஷேமந்தானே. நீ எப்படி யிருக்கிருய்? அதுதான் சரி-ஹோ-அப்படியாயின் நீயும் பத்திரிகைகளில் வாசித்தாயோ-இல்லை-முக்கியமானது ஒன்றும் களவு போகவில்லை-வந்தனம்-விசேஷமில்லை. பத்திரிகைகளுக்கு இம்மாதிரி சங்கதிகள் கிடைத்தால் அவற்றைப் பிரமாதமாக எழுதிக்கொண் டிருப்பார்கள். இப்போது

என்னிடம் பத்திரிகைக்குச் சமாசாரம் எழுதுவோர் இருவர் வந்திருக்கிறார்கள். அவர்கள் என்ன செய்கிறார்களோ கடவுளுக்கே தெரியும். ஆனால் பத்திரிகைக்குச் செலவில்லாமல் விளம்பரம் சேகரிக்கிறார்கள் என்று நான் அறிகிறேன். பனிரண்டாந் தேதி நான் ஏற்பாடு செய்திருக்கும் நடனவிருந்தை மறந்துவிட மாட்டாயல்லவா? ஆ அதுதான் சரி-உன் கணவன் வர அனுகூலமில்லாவிடினும் நீ வரவேண்டும். சரிதான், வந்தனம்.''

இவ்வாறு பேசி முடிந்ததும் அவன் மிக்க நிம்மதியடைந்த முகக்குறியோடு திரும்பி கிருஷ்ணராவும் ஜெகநாதனு மிருக்குமிடத்திற்கு வந்து "ஏன்? உங்கள் வேலை யின்னும் முடியவில்லையா?'' என்று தடபுடலாய்க் கேட்டான். கிருஷ்ணராவ் ஆச்சு என்று தன் எந்திரத்தைப் பிரித்து மூட்டை கட்டிக்கொண்டே காரியாலயத்தி னமைப்பையும், இலக்ஷ்மணசாமியின் மாதிரிகளையும் நன்றாகக் கவனித்துக் கொள்வதற்காகத் தன்னாலான வரையில் காலகரணம் செய்துகொண்டிருந்தான்.

இதுகாறும் தன் விஷயங்களைப்பற்றி ஒன்றுமே பேசாமல் மர்மமாகவே யிருந்த இலக்ஷ்மணசாமி அச்சமயம் அதை மறந்தவன்போல் "இன்று காலை என் விஷயத்தில் எல்லாரும் சிரத்தை காட்டுகிறார்கள் போல் காண்கிறது'' என்றான். ஜெகநாதன், "ஓகோ இவனிடம் களவு போன விஷயத்தில் பலருக்குச் சிரத்தை யுண்டுபோலும்'' என்று எண்ணிக்கொண்டான்.

கிருஷ்ணராவ் தன் எந்திரத்தை மூட்டை கட்டி முடிந்தபின் கடைசியாக இலக்ஷ்மணசாமியை நோக்கி "எங்கள் வேலை முடிந்தது; நடந்த விஷயங்களை அதிகமாக அறிந்து கொள்ளாவிடினும் இங்கு வந்து களவு செய்த

ஆள் ஒரு மனிதன் என்றும், மிக்க பலம் பொருந்தியவனென்றும், கதவுகளை யிவ்வாறு திறப்பதில் பழகியவனென்றும் இதுவரையிலாவது தெரிந்து கொண்டதாக நீர் திருப்தியடையலாம்" என்றான்.

இலக்ஷ்மணசாமி பேசாமல் தலையசைத்தான். கிருஷ்ணராவ் இக்களவு விஷயத்தில் தனக்கு அதிக சிரத்தையில்லையென்று காட்டிக்கொண்டபோதிலும், அவன் போவதாகக் கூறியது இலக்ஷ்மணசாமிக்குப் பெரும்பாரம் ஒழிந்தது போல் தோன்றியது என்று அவன் முகத்தால் தெரிந்தது.

கிருஷ்ணராவ் "நீர் உம்முடைய முக்கியமான கடிதங்கள் பத்திரங்கள் முதலியவைகளையெல்லாம் வீட்டிலேயே பத்திரமான விடங்களில் வைப்பது வழக்கம் போலும்" என்று சொல்லி விடையை யவ்வளவாய் எதிர்பார்க்காமலே ஏதோ பேச்சு முறைமைக்குக் கேட்பவன் போல் மிக்க தந்திரமாய் வலை வீசினான். ஆனால் இலக்ஷ்மணசாமி மிக்க தந்திரசாலியாதலின் அவன் அந்த கவலையில் சிக்குகிற ஆசாமியாகப் புலப்படவில்லை. அவன் உடனே, "உண்மையில் பேசிக்கொண்டிருக்க எனக்கு விருப்பமில்லை. மிக்க வந்தனம். போய் வாருங்கள்" என்றான்.

கிருஷ்ணராவும் ஜகநாதனும் அங்கிருந்து புறப்பட்டுச் சென்றுகொண்டிருக்கையில் கிருஷ்ணராவ் "இவன் மிக்க சறுக்கலான ஆசாமி. அந்த உலகாம்பாள் கறுப்புப் புத்தகத்தைக் கண்டு பிடிக்கவும் தன் கௌரவத்தைக் காப்பாற்றவும் தன்னால் கூடிய முயற்சிகளனைத்தும் செய்கிறானென்பது தெரிகிறது" என்றான்.

ஜெகநாதன் ஒன்றுமே கூறவில்லை. இலக்ஷ்மணசாமி காட்டிய அலட்சியமான அபிநயமும் அவனுடைய மனங் கலங்காத்தோற்றமும் ஜெகநாதனை மயக்கி விட்டன. இலக்ஷ

மணசாமி உண்மையாகவே யதை யிழந்து விட்டாலும், இழக்காதவன் போலவே தைரியத்தோடு எதிரிகளுக்கு இடந்தராமல் தன் காரியத்தைச் செய்கிறவன் என்பது ஜெகநாதன் மனதிற்பட்டது.

கிருஷ்ணராவோ சற்றும் மனச்சோர்வடையவில்லை. ஒரு விஷயத்தில் தன் சாமார்த்தியத்தோடு பந்தயம்போடு வதற்குச் சமானமான ஆள் கிடைத்தானென்றும், இவன் தூர்க்கையன் மதுரநாயகம் பிள்ளை யிவர்களைவிடச் சாமார்த்தியக்காரனென்றும், சந்தோஷமடைந்தான். பின்னர் கிருஷ்ணராவ் ஜெகநாதனை நோக்கி "நான் கருணாகரம் பிள்ளையைப் (துரைத்தன வக்கீல்) பார்க்கவேண்டும். இந்த மூட்டையை யெடுத்துக்கொண்டு நகர வீதிகளிற் செல்வது அசிங்கம். இதோ ஒரு டெலிபோன் சாலை யிருக்கிறது. கருணாகரம் பிள்ளையை நமது இரசாயன சாலைக்கு வரும்படி நான் டெலிபோனில் அறிவித்து விட்டு வருகிறேன்" என்று கூறி வண்டியை நிறுத்தி அருகிலிருந்த டெலிபோன் காரியாலயத்திற்குச் சென்றான்.

கிருஷ்ணராவ் கால்மணி நேரங் கழித்து டெலிபோன் காரியாலயத்திலிருந்து அங்கிருந்த நெருக்கத்தால் வியர்த்துக் களைப்போடு வந்து ஜெகநாதனை நோக்கி "கருணாகரம் பிள்ளை சமாசாரம் வைத்துக்கொண் டிருந்திருக்கிறார். ஒரு கடிதம். அவ்வளவுதான் இப்போதவர் கூறக் கூடும். அவர் இரசாயன சாலையில் நம்மைச் சந்திப்பார்" என்றான்.

வழியில் ஜகநாதன் கிருஷ்ணராவை நோக்கி "இரத்னபாய் விஷயத்தைப்பற்றி யிப்போதென்ன நினைக்கிறாய்?" என்றான்.

கிருஷ்ணராவ் தலையசைத்துவிட்டு "எனக்கொன்றுந் தெரியாது. கருணாகரம்பிள்ளை தூர்க்கையன் மேலும்

மதுரநாயத்தின்மேலும் தமது துப்பறிபவர்களை மோசூல் வைத்திருக்கிறார். இலக்ஷ்மணசாமி அக்கறுப்புப் புத்தகத்தை யிழந்து விட்டது உண்மையாகவே யிருப்பினும் அது அவர்களிடம் இருப்பதாகக் காணப்படவில்லை" என்றான்.

கிருஷ்ணாராவ் சந்தேகித்தபடி, இலக்ஷ்மணசாமி யப்புத்தகத்தை வேறெங்கேனும் பதனப்படுத்தி யிருக்கலாகாதா என்று வியப்போடு சிந்தித்தான். துர்க்கையனும் மதுரநாயகமும் காட்டும் சுறுசுறுப்பை நோக்க அவர்களுக்கு இக்களவைப்பற்றி, வெளியில் தோன்றுவதைவிட, அதிகமாகவே தெரியுமென்று கருதவேண்டி யிருந்தது. "ஒரு சமயம் அவர்களே அந்தவேலையைச் செய்தவர்களாயின் அவர்கள் அதற்காகத் தாங்கள் ஏற்படுத்திய ஆளால் துரோகம் செய்யப்பட்டார்களோ?" என்று ஜெகநாதன் வியப்படைந்தான்.

இரும்புப்பெட்டி யுடைக்கப் பட்டதும், இலக்ஷ்மணசாமி அதைப்பற்றி அலக்ஷியமாகக் கருதுபவன் போல் அபிநயித்ததும் இவ்விஷயத்தில் மிக்க குழப்பத்தை யுண்டாக்கிவிட்டன. இதற்கு முன் கிருஷ்ணாராவும் ஜெகநாதனும் இலக்ஷ்மணசாமி யிடமே யப்புத்தகம் இருக்கிறதென்று நிச்சயமாக எண்ணி யிருந்தார்கள். இப்போது இவ்வளவு தூரம் ஆராய்ச்சி செய்ததில், உண்மை விளங்குவதற்குப் பதிலாகச் சந்தேகம் அதிகரித்தது. இன்னது தான் நிச்சயமெனத் தீர்மானிக்க ஒன்றுமே புலப்படவில்லை.

கிருஷ்ணாராவும் ஜகநாதனும் நகரம்போய்ச் சேர்ந்ததும் நேராய் இரசாயன சாலைக்குச் சென்றார்கள். ஏனெனில் கருணாகரம் பிள்ளையை யுடனே யங்குவரும்படி கிருஷ்

ணாவ் டெலிபோனில் கேட்டுக்கொண்ட படியால். அங் குப் போய்ச்சேர்ந்ததும், இருவரும் அவர் வருகைக்காக ஆவலோடு எதிர்பார்த்துக்கொண் டிருந்தார்கள். சுமார் அரைமணி நேரங்கழித்துக் கருணாகரம்பிள்ளை அங்குவந் தார். அவர் தாம் இதுகாறும் மிக்கக் கலவரப்பட்டுக் கொண்டிருந்த அக்கடிதத்தை யெடுத்துப் பிரித்துக் கிருஷ் ணாவிட மளித்தார்.

அக்கடிதம் சாதாரணமான ஒரு கடிதத்தில் அச்சு எழுத்துகளால் (டைப்ரைடிங்) அச்சியற்றப்பட்டிருந்தது. மேல் உறையும் சாதாரணமான கடிதமே. அதின்மேல் எத்தகைய குறிகளுமில்லை. அது நகரத்தின் மேற்குப் பாகத்திலிருந்து வந்தது என்றுமட்டு மறியலாம். அக் கடிதத்தில் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது:—

"பிரியமான அய்யா.

இக்கடிதம் அநாமதேயக் கடிதமா யிருந்தாலும் இதை யப்படியே கருதி யலட்சியம் செய்யமாட்டீர்க ளென்று நான் நம்புகிறேன். இதில்வரும் விஷயங்களால் நான் இதில் கையொப்பம்வைக்காமலிருப்பதற்குப் போது மான காரணங்களிருக்கின்றன வென்பது நன்குவிளங்கும்.

மேற்கு ஐம்பதாவது வீதியிலுள்ள சின்னமாளிகை யென்ற ஹோட்டல் உங்களுக்கு நன்றாகத்தெரியும். அங்கு நடந்த சில விஷயங்களைப்பற்றி நான் அறிவிக்க விரும்பு கிறேன். அந்தவிடத்திற்கு அநேகம் செல்வவந்தர்களாகிய வாலிபர்கள் வருகிறார்கள். நான் அவர்கள் பெயர்களைக் கூறலாகாது. ஆயினும் ஒரு ஆள் சங்கங்களிலும் நகரத்தி லும் நடமாடுவதால் மிக்க பிரசித்தி பெற்றவனே. மற்றொ ருவன், பாங்கியில் சம்பந்தப் பட்டவனா யிருப்பதோடு பிர சித்திபெற்ற ஒருதரகன். மூன்றாவதாள் ஒருவக்கீல். இன் னொருவன் இவர்களுக்கு மிக்க சிநேகமானவன். ஆனால்

இவர்களுக்குச் சமானமான அந்தஸ்தில் இருப்பவனல்ல. அவன் ஒரு வைத்தியன். அந்த ஹோட்டலுக்கு வருகிற வர்களால் நன்குமதித்துப் புகழப்பட்டவன். அவன் அவர் களுக்கு வைத்திய சம்பந்தமான எத்தகைய அத்தாட்சிப் பத்திரங்களையும் மருந்துகளையும் அளிக்கக்கூடியவன்.

நான் இரத்னபாய் காணமற்போனதைப் பத்திரிகை களில் அதிகமாகப் பார்த்திருக்கிறேன். அந்த விஷயத்தில் எனக்கு அனுதாப மிருக்கிறது. இப்போது நான் கூறும் குறிப்பான விஷயங்களை நீங்கள் ஆராய்ச்சிசெய்தால் உங்க ளுக்கு நல்ல பலன் கிடைக்குமென்று நான் கருதுகிறேன். இன்னும் அதிகமாகக் கூறுவது அனுவசிய மென்று கருது கிறேன். அப்படிக் கூறுவது உண்மையில் எனக்கு ஆபத் தாக முடியும். இக்கடிதத்தை உம்மோடு நெருங்கிய சம் பந்த முடையவர்கள் தவிர மற்றபேருக்குக் காட்டவேண் டாமென்று பிரார்த்திக்கிறேன்.

இரத்னபாய் இந்த ஹோட்டலில் இல்லை. ஆனால் இந்த ஹோட்டலிலேயே மிக்க அயோக்கியர்கள் என்று கருதப் பட்டவர்களில் சிலருக்கு அவளைப்பற்றிக் கொஞ்சம் சங்கதி தெரியும் என்றவரையில் எனக்கு நிச்சயம்.

இப்படிக்கு
ஒரு அற்பன்."

கிருஷ்ணராவ் இக்கடிதத்தை வாசித்தானதும் சட் டென்று கருணாகரம் பிள்ளையின் முகத்தை நோக்கியபின், பின்வருமாறு கூறினான்:—

"இத்தகைய அநாமதேயக் கடிதங்கள் ஒவ்வொரு சமயம் சிநேகத் தன்மையாகவே யெழுதப்படுகின்றன. ஆனால் சாதாரணமாக அத்தகைய கடிதங்கள் அயோக்கி யர்களாலேயே வரையப்படுகின்றன. இதனால் சாதாரண மாய் இவை கவனிக்கப்படுவதில்லை. ஆயினும் சில சமயங்

களில் இவை மிக்க உண்மையானவைகளாகவே யிருக்கின்றன. அனேக சந்தர்ப்பங்களில் இத்தகைய கடிதங்கள் பெரிய மர்மமான குற்றங்களைக் கண்டறியத்தக்க உளவுகளை யளிக்கக் கூடியவைகளாக விருக்கின்றன.

இத்தகைய கடிதங்களிலிருந்து உடனே சில விஷயங்களைக் கண்டறியலாகும். பெரும்பாலானவற்றில் இத்தகைய கடிதங்களை யெழுதுவோர், பெண்பாலரே. கடிதங்கள், எழுத்து முதலிய பல அத்தாட்சிகளால் எழுதியவர் பெண்பாலா ரென்றும், இன்னும் அவர்களின் வயது, கல்வியளவு, தொழில் முதலியன இத்தகையனவென்றும் அறியலாகும். இவற்றால் பெரும்பாலும், எழுதிய ஆள் இன்னார் என்று கண்டுகொள்ளலாம்,

இப்போது இச்சந்தர்ப்பத்தில் இதை யெழுதிய நபர் நன்றாய்க் கல்விகற்ற ஆள். ஆனால் இத்தகையினர் கல்வியில்லாதவர்கள்போல் அபிநயிப்பது வழக்கம். உண்மையில் கல்வியில்லாதவர்கள் கல்வியுடையவர்கள் போல் நடிக்க முயல்வது ஆகாதகாரியம். மேலும் மாதர் இத்தகைய விஷயத்தில் ஆடவர்போல் அபிநயம் செய்வதுண்டு. ஆடவர்மாதர்போல் அபிநயிக்க முயல்வது மிக்க அருமை. இவ்விஷயத்தில் இத்தகைய பல சங்கதிகள் கவனிக்கத்தக்கவையா யிருக்கின்றன. இது கையால் எழுதப்பட்ட கடிதமா யிராமற்போனது மிக்க துரதிஷ்டம். எப்படி யிருந்தாலும் நம்மிடம் கிடைத்ததைக் கொண்டு கூடியவரையில் விஷயத்தைக் கண்டறிய முயல்வோம். இதைப்பற்றித் தங்களுக்குண்டா யிருக்கும் அபிப்பிராயமென்ன?" என்றான்.

5-வது அத்தியாயம்.

அந்த அநாமதேயக் கடிதத்தைப் பற்றி தங்கள் அபிப்பிராயமென்னவென்று கிருஷ்ணராவ் கேட்டதற்கு கருணாகரம் பிள்ளை பின்வருமாறு கூறினர்:—

"எனக்கென்ன தோன்றுகிறதெனில், இந் நகரில் அயோக்கிய நடக்கைக்காகப் பெண் பிள்ளைகளை யேமாற்றி யழைத்துப் போகவும், அல்லது களவாடிக்கொண்டு போகவும், அவற்றிற்கென்றே சில ஆட்கள் இருக்கிறார்கள். அவர்கள் இத்தொழிலை நல்ல இலாபகரமான வர்த்தகமாகவே கருதி நடத்துகிறார்கள். அத்தகைய வர்த்தக சாலைகளில் சிலவற்றைப் போலீஸார் கொஞ்சக் காலத்திற்கு முன் கண்டு பிடித்து மூடிவிட்டார்கள். இந்தச் சின்ன மாளிகை அத்தகைய விடங்களில் முதன்மையான ஒன்று. அதிலும் இந்த ஹோட்டல் மிக்க அபாயகரமானது. ஏனெனில் இது வெளித் தோற்றத்திற்கு மிக்க நாணயமான முதல்தர ஹோட்டல் போல் நடத்தப் படுகிறது. பகிரங்கமாகப் பார்ப்பதற்கு அங்கு சட்டத்திற்கு விரோதமான ஒரு காரியமும் நடப்பதில்லை." என்றான்.

கருணாகரம்பிள்ளை கூறிய இவற்றையெல்லாம் கேட்டுக்கொண்ட கிருஷ்ணராவ் அக்கடிதத்தை மிக்க கவனமாக உற்றுநோக்கிக்கொண் டிருந்தான். கடைசியில் தன் ஜேபியிலிருந்து ஒரு சிறு கண்ணாடியைக் கையிலெடுத்துக்கொண்டு கருணாகரம் பிள்ளையை நோக்கி,

"அப்படியாயின் தாங்கள் முன்பே, சின்ன மாளிகை யென்ற ஹோட்டலைப்பற்றி ஆராய்ச்சி செய்து விட்டீர்கள்?" என்றான்.

கருணாகரம் பிள்ளை:—"ஆகா, உண்மையாகவே ஆராய்ச்சி செய்தேன்" என்று கிருஷ்ணராவை யுற்றுநோக்கிக்

கொண்டே, "அந்த ஹோட்டல் மிக்க கெட்டபெயர் பெற்றது. ஆயினும் அதன்மேல் குற்றம்சாட்டத்தக்க எந்த விஷயத்தையும் இன்னும் நான் கண்டு பிடிக்க முடியவில்லை. அந்த ஆசாமிகள் அசாத்தியமான கெட்டிக்காரர்கள். பகிரங்கமாய்ச் சட்டத்திற்கு விரோதமான விஷயம் எதுவும் அங்கு நேர்வதில்லை. வெளி மரியாதைகளில் சற்றும் தவறுமல் நடந்து கொள்கிறுர்கள்." என்றுர்.

கிருஷ்ணுராவ் அச்சடிக்கப்பட்ட அக்கடிதத்தில் தன்னிடமிருந்த துண்டுக் கண்ணுடியை வைத்துப் பார்த்தான். அக்கடிதத்தில் குறுக்கும் நெடுக்குமாகக் கோடுகள் போடப்பட்டிருந்தன. அதனுல் அக்கோடுகள் சிறு சிறு சதுரங்களாகக் காணப்பட்டன. அச்செழுத்துகள் ஒவ்வொரு சதுரத்தில் ஒவ்வொரு எழுத்தாக அமைந்திருந்தன. கிருஷ்ணுராவ் கடிதத்தின் மாதிரியையும் எழுத்துகளின் அமைப்பையும் நன்ருகக் கவனித்தான். பிறகு தன் மேஜைமேலிருந்த சில கடிதங்களை யெடுத்து அவற்றை யொவ்வொன்ருக அந்தக் கடிதத்தோடு ஒப்பிட்டுப் பார்த்தான்.

கிருஷ்ணுராவ் யாவும் பார்த்தபின் கடைசியில் நாற்காலியில் சாய்ந்து கொண்டு ஜகநாதனையும் கருணுகரம் பிள்ளையையும் நோக்கி "இது சாதாரண பைகா எழுத்துகளால் அச்சடிக்கப்பட்டதே. இதை யச்சடித்த எந்திரம் மிக்க முரட்டுத்தனமாகக் கையாடப்பட்டது. ஆனுல் அது பழைய எந்திரமல்ல. அது எந்தத் தொழிற்சாலையில் செய்யப்பட்டதென்று கண்டறியக் கொஞ்சகாலம் பிடிக்கும். அதைக் கண்டுபிடித்தால் அதன்பின் சுலபமாகவே அது எந்த எந்திரம் என்று அறிந்து கொள்வேன். அந்த எந்திரத்தைக் கண்டு பிடித்து விட்டால்

ஒருவித உளவு அகப்பட்ட மாதிரியாகும். ஏனெனில் அதன் மூலமாக இக்கடிதம் அனுப்பிய ஆளை யறியலாம். இதை நான் வைத்துக்கொண்டு சாவதானமாயிருக்கையில் சிந்திப்பேன்'' என்றான்.

கருணாகரம் பிள்ளை:—“ஆகா அப்படியே செய்'' என்றார்.

அவர் சற்றுநேரம் பேசாமலிருந்தார். அதன் பிறகு அன்று காலை பத்திரிகைகளில் இரத்னுபாயின் விஷயங் களைப்பற்றி வாசித்ததை நினைந்து கொண்டவர்போல் “அந்த இலக்ஷ்மணசாமியின் பெட்டியிலிருந்து களவாடப் பட்டது ஒரு ஆச்சரியமான சம்பவமல்லவா? இரத்னு பாய் என்ன வேலையிலிருந்தாள் என்பது உனக்குத்தெரியு மென்று கருதுகிறேன்'' என்றார்.

ஜகநாதன் “ஆகா இலக்ஷ்மணசாமியிடம் அச்சு எந் திரத்தில் கடிதங்கள் அச்சடிப்பதோடு அவனுடைய காரியஸ்தியாகவுமிருந்தாள்'' என்று கூறினான்.

கருணாகரம் பிள்ளை:—அவ்வேலைகள் எனக்குத் தெரியும். நான் கேட்பது வேறொன்று; உங்களுக்கது தெரியு மென்று நான் கருதவில்லை. என்னிடமுள்ள வெளிப் பிரதேச துப்பறியும் ஆசாமிகள் கடந்த இரவு தான் அதைக் கண்டு பிடித்தார்கள்.

கிருஷ்ணராவ் இலக்ஷ்மணசாமியின் இரும்புப் பெட் டிக் களவு என்ற சங்கதியைக் கேட்டதே தன் கடிதங்களை யெல்லாம் ஒரு பக்கமாக வைத்துவிட்டு, “இல்லை, தெரி யாது. அதென்ன சங்கதி?'' என்று கெட்டான்.

கருணாகரம்பிள்ளை சுவர்களுக்குக்கூட செவிகளிருக் குமோ வென்று அச்சப்படுகிறவர்போல் குனிந்து மெது வாய் “ துர்க்கையன் இருக்கும் 5 - வது வீதியிலுள்ள கட்டிடத்தின் பக்க வீட்டி லிருந்துகொண்டு, துர்க் கையன் அறையின் சுவரில் வைக்கப்பட்டிருந்த கள்ள

டெலிபோன் மூலமாக வரும் சமாசாரத்தை வாங்கிக் கொண்டிருந்தவள் இரத்னபாய் தான்'' என்று கூறிவிட்டு, இச்சங்கதியைக் கேட்டதும் கிருஷ்ணராவ் ஜெகநாதன் இவர்களுக்கு எத்தகைய உணர்ச்சியுண்டாகிறது பார்ப் போமென்று நிமிர்ந்து அவர்கள் முகங்களை நோக்கினர். ஆனால் அவர்கள் முகத்தில் ஆவல் தவிர ஒன்றுமில்லை.

பிறகு மெதுவாகவே இன்னும் கூறத்தொடங்கி, "ஆம். நான் என் ஆள்களை வெளியில் விட்டு விசாரிக்கச் செய்தேன். அவர்கள் அப்படித்தான் கருதுகிறார்கள். அவள் சில சமயங்களில் இலக்ஷ்மணசாமிப் பிள்ளைக்காக மிக்க இரகசியமும் நம்பகமுமான வேலைகளைச் செய்திருக் கிறாள் என்றும், சில சந்தர்ப்பங்களில் அதற்காக நகருக்கு வெளியில்கூடக் கொஞ்சம்தூரம் பிரயாணம் செய்திருக் கிறாளென்றும் நம்புவதற்குக் காரணம் இருக்கிறது. இப் போது அவள் இந்தக் கறுப்புப்புத்தக விவகாரத்தில்தான் சிக்கிக்கொண் டிருக்கிறாள் என்றே நான் நினைக்கிறேன்.'' என்றார்.

ஜெகநாதன்:—"இலக்ஷ்மணசாமி எதைப்பற்றியும் அதிக மாகப் பேசுகிறவனுயில்லை. அவன் நடந்துகொண்ட மாதிரியால் மேலுக்குப் புலப்படுவதை விட, இவ்வி ஷயத்தில் அவனுக்கு அதிகமாகவே தெரியுமென்று நான் கருதுகிறேன்'' என்றான்.

கருணாகரம்பிள்ளை: —"அது சரிதான். இரத்னபாயே அந்தக் கள்ள டெலிபோன் மூலமாகவரும் சமாசா ரத்தை வாங்கிக்கொண்டவள் என்று என் ஆட்கள் கண்டு பிடிப்பதாயின், இந்த விவகாரத்தில் அவள் ஒரு முக்கியமான ஆளாகிவிடுகிறாள். இதில் சம்பந்த முடைய மற்றபேருக்கும் இது தெரிந்திருக்க வேண் டும். இதன் அர்த்தமென்ன தெரிகிறதா? அவள்

அகப்படாமலிருந்தால், அந்தக் கள்ள டெலிபோன் மூலமாக வெளியான சங்கதி யின்னதென்று கூறுபவர் ஒருவருமில்லை. பேசியகுரல் யாருடையதென்று கண்டு பிடிக்கவும் முடியாது." என்றார்.

கிருஷ்ணராவ்: — "துர்க்கையனும் அவன் ஆட்களும் வெளியான சங்கதிகளைப் பயனற்றவைகளாக்கத் தங்களாலான முயற்சியனைத்தும் செய்வார்கள் என்பது உண்மை. அந்தப் பெண்ணுக்கு என்ன நேர்ந்திருக்குமென்பதைப் பற்றித் தங்களுக்கேதேனும் உத்தேசமுண்டோ?" என்றான்.

கருணாகரம்பிள்ளை தெரியாதென்று தலையசைத்துவிட்டு மெதுவாய் "அதற்குப் பலகாரணங்களிருக்கலாகும். நமக்குத்தெரிந்தவரையில் இரத்னபாய் தன் தாயாரோடும் சகோதரியோடும், ஒழுங்காகவே ஜீவனம் செய்துகொண்டிருந்தாள் என்பது தெரிகிறது. இலக்ஷ்மணசாமிக்காகச் சில வேலைகள் செய்திருக்கிறாள். சமீபகாலத்தில் அக்கள்ள டெலிபோன் சமாசாரத்தை வாங்குவதற்காக அவள் நெடுநேரம் வெளியில் சென்றிருந்தபோதும் மிக்க அடக்கத்தோடு தன் தாயாரையும் தன் தங்கையின் கல்வி முதலிய விஷயங்களையும் கவனித்துக்கொண்டு மிக்க அடக்கமாகவே நடந்துகொண்டிருந்தாள்" என்றார்.

கிருஷ்ணராவ்:—"அக்கள்ள டெலிபோன் சாமாசாரத்தை வாங்கிக்கொள்ள ஏற்படுத்தப்பட்ட இடம் எத்தகையது என்று தங்களுக்குத் தெரியுமோ?" என்று உடனே கேட்டான்.

கருணாகரம்பிள்ளை:— "ஆகா தெரியும். அந்தவிடம் மிக்க மரியாதையான போஜனசாலை. அவள் ஒரு வாரத்திற்கு முன் அந்த விடத்திற்குப்போய் தான் நகரை

விட்டுக் கொஞ்சநாள் வெளியில் போயிருந்ததால் திடீலென்று சரியானவிடம் அமர்த்திக் கொள்ள முடியவில்லை யென்றும், அதனால் அங்கே இடம் வேண்டுமென்றும் அவ்விடத்திற் குரியாரிடம் கேட்டாள். அச்சமயம் அங்கு ஒரு அறையில் ஒரு வாலிபன் இருந்தான். அவன் மின்சாரத் தொழிற்சாலையில் வேலைசெய்பவன். அவன் தன் அறையைக் காலி செய்துவிட்டான். அதில் அவள் இருந்தாள். அந்த வாலிபன்றான் அங்கு கள்ளக்கருவியை அமைத்திருப்பவனாக வேண்டும். அந்த அறையில் அவள் தனியாகவே யிருந்தாள். அதாவது அவள் அங்கிருக்கும்போது அந்த விடத்திலுள்ள வேறு ஒருவரோடும் அவள் அறிமுகம் வைத்துக்கொள்ளவில்லை. துர்க்கையன் கம்பிகளைத் தொடர்ந்து சென்று அவளிருந்த அறையில்தான் அவை முடிகின்றன வென்பதைக் கண்டான். ஆனால் அதற்குள் அவள் அங்கிருந்து போய்விட்டாள். அந்த அறையில் உளவளிக்கத்தக்க பொருள்கள் ஒன்றுமேயில்லை. அவள் எப்படியோ துர்க்கையன் தன் வீட்டில் வைக்கப்பட்ட கள்ள டெலிபோனைக் கண்டு பிடித்துவிட்டான் என்று தெரிந்துகொண் டிருக்க வேண்டும். அவள் அந்த அறையைவிட்டுச் செல்லுமட்டும் ஒருவர்க்கும் அவ்விஷயத்தைப் பற்றி ஒன்றுமே தெரியாது.'' என்றார்.

ஜெகநாதன்:—'' ஒருசமயம் இலக்ஷ்மணசாமி ஒருவரும் அவள் சாக்ஷியத்தை யுணராவண்ணம், அவசியமான காலம் வரையில் அவளை யெங்கோ மறைத்து வைத்திருப்பான்'' என்றான்.

கருணாகரம்பிள்ளை:—''அப்படியேயிருக்கலாகும்'' என்றார்.

ஆனால் அவர்கூறியமாதிரியால் தாம் அம்மாதிரி நம்பவில்லை யென்பது தோன்றியது. அவர் கிருஷ்ணாராவை நோக்கி "இலக்ஷ்மணசாமியின் இரும்புப் பெட்டிக் களைவைப்பற்றி நீ என்ன நினைக்கிறாய்? சில பத்திரிகைகள் இரத்னாபாய் அதைப்பற்றி யறிந்திருக்க வேண்டு மென்று கூறுகின்றன. இச்சங்கதிகள் நடந்தபின் அங்குச்சென்று கவனிக்கும்படி நான் ஒரு ஆளை யனுப்பினேன். ஆனால் அவனை யார் கண்ணுக்கும் புலப்படாமல் மறைந்திருக்கும்படி கூறினேன். அங்கிருந்த ஆட்களிலொருவன் கள்ளர்கள் இரும்புப் பெட்டியைத் துளை செய்துவிட்டார்கள் என்று அவனிடம் கூறினானாம். அதென்ன அர்த்தம்? நீ அங்குச்சென்று பார்த்தாயா?" என்று வினவினார்.

அதன்மேல் கிருஷ்ணாராவ் தான் இலக்ஷ்மணசாமியின் காரியாலயத்திற்குச் சென்று இரும்புப் பெட்டியைப் பார்த்தது முதலிய யாவும் கூறி, அப்பெட்டி துளை செய்யப்பட்டிருக்கிற மாதிரியால் இரத்னாபாய் அதில் சம்பந்தப்படவில்லை யென்று தெரிகிறது என்று கூறினான்.

கிருஷ்ணாராவ் அந்த இரும்புப் பெட்டியின் மேல்புறத்தில் துளை செய்யப்பட்டிருந்த மாதிரியை விவகரித்தபோது கருணாகரம் பிள்ளை யெள்ளளவும் அதை நம்பவில்லை யென்பது அவர் முகக்குறியால் தெரிந்தது. ஜெகநாதனே அதை நேராய்க் கண்டபடியால் கிருஷ்ணாராவ் கூறுவது உண்மை யென்றுமட்டும் அவனுக்குத் தெரியும். ஆனால் இலக்ஷ்மணசாமிப் பிள்ளை தன் காரியாலயத்தை மூடிக்கொண்டு சென்றதற்கும் பிறகு அவன் இரவு எட்டு மணிக்கு வந்து திறந்ததற்கும் இடையிலிருந்த காலம் சரியாக மூன்று மணி நேரமில்லை. அவ்வளவு காலத்தில் கள்ளர் அசைக்க முடியாமலிருக்க வேண்டுமென்று செய்யப்பட்ட ஒரு இரும்புப் பெட்டியின் மேலுள்ள கடின

186529

மான எஃகுத்தகட்டில் அத்தகைய பெரிய துவாரத்தைச் செய்வது எத்தகைய மனிதனாலும் ஆகக்கூடிய காரியமல்ல- அதற்கென்று துவையலிடப்பட்ட பிரத்தியேக அரங்களைக் கொண்டு அறுப்பதாயினும் குறைந்தது எழெட்டு மணி நேரம் செல்லும். அப்படி அரத்தால் அறுக்கப்பட்ட தாகவும் அது புலப்படவில்லை யாதலின் ஜெகநாதனுக்கு அது பெரிய அதிசயமாகவே புலப்பட்டது. ஆகையால் அவனும் கருணாகரம் பிள்ளையும் மிக்க அவநம்பகத்தோ டேயே கிருஷ்ணராவை நோக்கினர்கள்.

கிருஷ்ணராவோ அவர்களுடைய சந்தேகத்திற்கு உடனே யெவ்வித விடையாவது சமாதானமாவது கூற வில்லை. அவன் உடனே தன் இரசாயன மருந்துகளிருக் கும் அலமாரியிலிருந்து இரண்டு புட்டிகளை யெடுத்துவந்து மேஜைமேல் வைத்தான். அவற்றில் ஒன்று பெரிய புட்டி, ஒன்று சிறிய புட்டி; பெரிய புட்டியில் ஒருவிதச் சிவப்புச் சூரணம் இருந்தது. சிறிய புட்டியில் இன்னொரு விதமான சூரணம் இருந்தது. கிருஷ்ணராவ் இரண்டு புட்டிகளையும் கொண்டுவந்து மேஜைமேல் வைத்துவிட்டு, இரண்டு எஃ குத் தகடுகளை யெடுத்து வந்தான். அவை ஒரு அடிச் சதுரம் இருக்கும்.

கிருஷ்ணராவ் முதலில் ஒரு தகட்டை ஒரு மேஜை மேல்வைத்து அதன் இருபுற வோரங்களிலும் இரண்டு கற்களை வைத்து அவற்றின்மேல் இன்னொரு தகட்டை வைத்தான். அந்த எஃகுத்தகடு கால் அங்குல கனத்திற் குக் குறையாமலிருக்கும். அத்தகட்டின்மேல் கிருஷ்ண ராவ் பெரிய புட்டியிலிருந்த சிவப்புச் சூரணத்தில் கொஞ் சம் வைத்தான். அதன்பிறகு ஒரு தட்டில் சிறிய புட்டியி லிருக்கும் மற்றொரு சூரணத்தில் கொஞ்சம் கொட்டி, ஒரு தீக்குச்சியைக் கிழித்து அதன்மேல் வைத்ததும் அது

எரியத் தொடங்கியது. கிருஷ்ணராவ் இவர்கள் இருவரை யும் நோக்கி அறையின் கோடிக்கு ஓடிவிடுங்கள் சீக்கிரம் என்றான். இருவரும் மிக்க வியப்போடு அவ்வாறே துரித மாகச் சென்றார்கள். பிறகு அவன் "சீக்கிரம் கண்களைப் பூரணமாகத் திறவாமல் மூடிக்கொண்டு மிக்க கொஞ்ச மாகத்திறந்து நடப்பதைக் கவனியுங்கள்'' என்று கூறி விட்டுத் தட்டில் எரியும் சூரணத்தை எஃகுத் தகட்டின் மேல் கொட்டப்பட்டிருந்த சிவப்புச் சூரணத்தின்மேல் கொட்டிவிட்டுத் தன் கண்களைக் கரத்தால் மறைத்துக் கொண்டு இவர்கள் இருக்கும் மூலைக்கு இரண்டெட்டாக ஓடிவந்து விட்டான்.

கருணாகரம் பிள்ளையும் ஜெகநாதனும் கண்களை மிகக் கொஞ்சமாகத் திறந்து பார்த்துக்கொண் டிருந்தார்கள். கிருஷ்ணராவ் எரியும் சூரணத்தை எஃகுத் தகட்டின் மேலிருக்கும் சிவப்புச் சூரணத்தின்மேல் போட்டதும் இவர்கள் கண்கள் வெடித்துப் போவதுபோன்ற ஒருவித ஜோதியோடு அது எரியத் தொடங்கியது. அப்போது சடசடவென்ற சத்தம் உண்டாகியது. கருணாகரம் பிள்ளை யும் ஜெகநாதனும் மூச்சுவிடாமல் கண்களைக் கரங்களால் மறைத்துக்கொண்டு பார்த்துக்கொண்டே யிருந்தார்கள்.

மேலேயிருந்த எஃகுத்தகடு அச்சோதியிருக்கிற அள விற்கு நீராய் உருகிக் கடைசியில் யாவும் பொத்தென்று கீழேயிருந்த தகட்டின்மேல் விழுந்தன. மேல் தகட்டில் அந்தச் சிவப்புச் சூரணம் எவ்வவளவு அகலத்திற்கு வைக் கப்பட்டிருந்ததோ அவ்வளவு அகலத்திற்கு அதில் வட்ட மான துவாரம் உண்டாய்விட்டது. இக் காட்சியைக் கண்ட இருவரும் அப்படியே பிரமித்து அசைவற்று நின் றார்கள். அவர்களால் தங்கள் கண்ணுற் கண்டதையே நம்பக்கூடவில்லை. எப்படி நம்புவார்கள் பாபம்? மேற்கு

நாட்டாரின் சடசாத்திர ஆராய்ச்சியின் பலன் இத்தகைய களவுகளை யெல்லாம் செய்கிறது.

ஏன்? அவர்கள் நாட்டம் முழுமையும் உலக போகங்களை யனுபவிக்கும் ஒரேவழியில் திரும்பிவிட்டது. தெய்வ பக்தி, கடவுள் வழிபாடு முதலிய ஆன்மார்த்த விஷயங்களனைத்தும் புத்தகத்தோடேயே. வாரத்திற் கொருமுறை கோயிலுக்குச் சென்று (கோயிலென்றால் பலபேர் ஒன்று சேர்ந்து கடவுளைப் பிரார்த்திக்கும் இடம் என்பதே அவர்கள் கருத்து) தமது பாபத்தை யொப்புக்கொண்டு கடவுளை மன்னிப்புக் கேட்டுக்கொண்டால் யாவும் மன்னிக்கப்படும் என்பதே அவர்கள் நம்பிக்கை.

இந்த அபூர்வக்காட்சியைக் கண்ட கருணாகரம் பிள்ளையும் ஜெகநாதனும் கிருஷ்ணராவோடு மெதுவாக மேஜையருகிற்சென்று மேலுள்ள எஃகுத்தகடு துளைக்கப்பட்டிருப்பதைக் கண்டதும் அடக்கமுடியாத வியப்போடு "இதென்ன அதிசயம்?" என்று வினவுவோர் போல் கிருஷ்ணராவின் முகத்தை நோக்கினார்கள். கருணாகரம் பிள்ளை கிருஷ்ணராவ் ஒரு தெய்வீக வல்லமையுடைய மனிதன் என்று கருதுபவர்போல் அவனை நோக்கினார். ஜெகநாதன் அத்தகட்டை உற்றுநோக்கியதும் இலக்ஷ்மணசாமியின் இரும்புப் பெட்டியின்மேல் இருந்த துவாரத்தைப்போலவே யிருப்பதைக் கண்டு பிரமித்துவிட்டான்.

கருணாகரம்பிள்ளை அத்தகட்டை நன்றாகப் பார்த்தபின் "கிருஷ்ணராவ்! இது நான் என்றுங் காணாத அற்புதக்காட்சி, இதன் சங்கதி யென்ன?" என்றார்.

அதன்மேல் கிருஷ்ணராவ் அது புதிதாக ஒரு இரசாயன சாஸ்திரியால் கண்டு பிடிக்கப்பட்டதென்றும், எத்தகைய கடினமான எஃகாக விருப்பினும் அது துளைத்துவிடுமென்றும், அதன் மற்ற விவரங்களையும் கூறினான்.

யாவும் கேட்ட கருணாகரம் பிள்ளையும் ஜெகநாதம் பிள்ளையும் பிரமித்ததையன்றி வேறொன்றும் கூறமுடியவில்லை.

கிருஷ்ணராவ் "யாரோ மிக்க அபூர்வ சாமார்த்தியமுடையவன் அல்லது அதிக சாமார்த்தியமுடையவனால் கற்பிக்கப்பட்ட ஒருவன் இவ்வேலையைச் செய்திருக்க வேண்டும். தர்க்கையனுக்காக அல்லது மதுரநாயகத்திற்காக அத்தகைய காரியத்தைச் செய்யத் தக்கவன் யாராவதிருக்கிறனென்று சந்தேகிக்கிறீரா?" என்றான்.

கருணாகரம் பிள்ளை:—"சந்தேகிக்கத்தக்க ஆள் ஒருவனிருக்கிறான். ஆனால் இப்போது இத்தகைய அபூர்வ சாமார்த்தியமான செயலைக் காணவே அவன் பெயரைக் கூறவும் எனக்கு வெட்கமாயிருக்கிறது. அவன் இத்தகைய காரியத்தைச் செய்யக் கூடியவனல்ல" என்றார்.

கிருஷ்ணராவ் நகைத்துக்கொண்டே "அப்படி நினைக்க வேண்டாம். சாதாரணக் கள்ளர்கள் சாத்திரங்களையேனும் சாத்திர ஆராய்ச்சியுடைய பத்திரங்களையேனும் வெகு சுலபமாகத் தெரிந்து கொள்ளக் கூடியவர்கள். எனக்கு இது எப்போது தெரியுமோ அப்போது முதலே யவர்களுக்கும் தெரியுமென்று நம்பும். இப்போது இதைக் கூட தடுக்கக் கூடிய பெட்டிகள் செய்யப்படுகின்றன. புதிதாய் சாத்திர ஆராய்ச்சி எவ்வளவு அதிகமாகிறதோ அதற்குச் சமமாகவே கள்ளர்களும் சாமார்த்தியமுடையவர்களாகி விடுகிறார்கள். ஆயினும் கள்ளனுடைய அபூர்வ சாமார்த்தியமே யவனைக் காட்டிக் கொடுத்து விடுகிறது. ஏனெனில் அதிக சாமார்த்தியமுடையோர் கொஞ்சம் பேரே யிருப்பார்களாதலால் நாம் அவர்களைச் சுலபமாய்க் கண்டு பிடித்து விடலாம்" என்றான்.

கருணாகரம்பிள்ளை "அப்படியாயின் நான் சந்தேகிக்

கத் தக்கவன் ஒருவன் இருக்கிறான். சட்டக் கூட்டத்தில் அவனுக்கு 'ஜட்கா சுப்பன்' என்று பெயர். அவன் மிக்க சாமார்த்தியக்காரன்; ஆயினும் இத்தகைய காரியத்தை யவன் செய்திருப்பான் என்று நான் கருதக் கூடவில்லை. ஆனால் அவன் அசாத்தியனே'' என்றார்.

கிருஷ்ணராவ்:—அவன்மேல் ஐயங்கொள்ள என்ன காரணம் இருக்கிறது?

கருணாகரம் பிள்ளை:—''காரணம் ஒன்றுமில்லை. அவன் இலக்ஷ்மணசாமியின் களவில் சம்பந்தப்பட்டிருப்ப தாக ஒரு அத்தாட்சியுமில்லை. மதுரநாயகம் பிள்ளை யிருக்கும் பிரதேசத்தில் முன்பு நடந்த சில குற்றங் களுக்காக நாங்கள் அவன்மேல் சந்தேகங்கொண்டு அவனைத் தேடிக்கொண்டிருந்தோம். ஜட்கா சுப்பன் ஒரு பேர் போன போக்கிரிக் கூட்டத்தின் தலைவன். மதுரநாயகம் பிள்ளைக்குப் போட்டியாய் மந்திரா லோசனைச் சபை முதலியவைகளில் அவயவி பதவிக் காக யாரேனும் முயற்சி செய்வதாயினும், தெரிந் தெடுப்புத் தினத்தில் மதுரநாயகம் பிள்ளைக்கு அனு கூலமாய் வேலை செய்யவேண்டியதாயினும் அவற்றில் இவன் தான் மதுரநாயகம்பிள்ளைக்கு வலது கை போன்றவன்'' என்றார்.

கிருஷ்ணராவ்:—அப்படியாயின், அவன் ஒரு போதேனும் சிக்கியிருப்பான்.

கருணாகரம்பிள்ளை:—ஆம் சிக்கியேதானிருப்பான். ஆனால் அவனுக்கு மதுரநாயகம் பிள்ளையின் உதவி பூராய் இருப்பதால் தப்பித்துக்கொண்டேயிருக்கிறான்.

கிருஷ்ணராவ்:—ஆயினும் அவன் போலீஸாருக்குத் தெரிந்தவனாகவே யிருப்பான்.

கருணாகரம் பிள்ளை:—ஆகா நான் நகரத்தில் நடமாடும்

போது ஜட்கா சுப்பனைப்பற்றி அதிகமாகக் கேள்விப் பட்டிருக்கிறேன். அவனுடைய விரோதிகள், நண் பர்கள், போலீஸார், யாவர்க்கும் அப்பெயரால் தான் அவன் தெரியும். சில வருடங்களுக்குமுன் அவன் இரண்டொரு பந்தயங்கள் ஜெயித்தான். குத்துச் சண்டை மல்யுத்தம் முதலியவற்றில் கெட்டிக்காரன். அது முதல் தான் அவன் பெயர் பிரபலமாயிற்று. அவன் நல்ல தேகபல முடையவன். முதலில் நாடோடியாகவே யிருந்தான். அவன் தேக பலமே யவனைக் கெட்ட வழிகளில் இழுத்துவிட்டது. அவன் முதலில் சொல்பகூலிக்கு மூட்டை சுமந்து கொண் டிருந்தான். அவன் கூட்டாளிகள் அவனை நோக்கி "அடே! உனக்கு நல்ல தேகபலம் இருக்கிறது. நீ மூட்டை தூக்குவதைவிட பந்தயத்திற்குக் குத்துச் சண்டைபோட்டால் சுலபமாக நல்ல பணம் சம்பா திப்பாய்" என்றார்கள். அதன்மேல் அவன் இரண் டொருவரிடம் குத்துச் சண்டை கற்றுக் கொண்டு பந்தயச் சண்டைகளை ஜெயிக்கத் தொடங்கினான்.

அதன்பின் அவன் நாணயமான மனிதன்போல் உடை யணியத்தொடங்கிப் பார்வைக்குப் பெரிய மனிதர் பிள்ளைகள் போல் வேடமணிந்துகொண்டு, ஒரு வேலையும் செய்யாமலே, பணம் மட்டும் தாராளமாகச் செலவு செய் யும் ஆசாமிகளிடம் சேர்ந்துகொண்டு அவர்களுக்கு எப் படிப்பணம் வருகிறதென்று அறிந்து கொண்டான். அதன் மேல் பகிரங்கமாகக் குத்துச் சண்டை செய்து பணம் பெறுவதைவிடத் தனியாகச் செல்லும் ஒருவன் தலைமேல் தட்டிப் பணம் பறிப்பது மிக்க சுலபம் என்று தெரிந்து கொண்டான். அதுவுமன்றிச் சுலபமாகவே சூதாலும்

மோசத்தாலும் பணம் சம்பாதிக்கப் பல வழிகளிருக்கின்றனவென்பதையும் அறிந்தான். அவற்றையெல்லாம் செய்தால் அவன் சிறையாக்கப்படலாகும். ஆதலால், தான் இந்த இராஜாங்கக் கட்சிக்காரர்களில் ஒருவரிடம் சேர்ந்து கொண்டால் அவர்கள் அத்தகையச் சில்லறையாபத்துக்களில் சிக்கவொட்டாமல் தன்னைக் காப்பாற்றுவார்களென்று முணர்ந்துகொண்டான்.

இதோடு ஜட்கா சுப்பன் பலவானாகவும் எதற்கும் அஞ்சாத மிருக சுபாவமுடையவனாகவும் இருப்பதால் சீக்கிரத்தில் தனக்கு ஒரு கூட்டத்தைச் சீடர்களாக ஏற்படுத்திக் கொண்டான். அவனுக்குப் போதுமான கல்வியுமுண்டு. இவ்வாறு அவன் மிக்க போக்கிரிகள், கள்ளர்கள் முதலிய அனேகம் பேர்கள் சேர்ந்த ஒரு கூட்டத்தின் தலைவனாய்விட்டான். இது கள்ளர் கூட்டத்தில் மட்டுமே சம்பந்தப்பட்டது. இதோடு ஒரு பக்கம் மதுரநாயகம் பிள்ளைக்கு வலக்கைபோன்ற உதவியாகவும் ஆய்விட்டான்.

இவன் சரித்திரம் யாவர்க்குமே தெரியும். இத்தகைய கூட்டங்கள் பல நகரில் இருக்கின்றன. அவற்றின் தலைவர்களுக் கெல்லாம் இவன் ஒரு குருபோ லாய்விட்டான். இவனைப் பல குற்றங்களுக்காகப் பிடிக்க நாங்கள் முயன்றோம். இச்சமயம் இவன் அகப்பட்டால் நமது காரியம் முடியுமட்டுமாயினும் எந்தக் குற்றத்திற்காவது இவனைச் சிறைப்படுத்தி வைக்கலாம். இக்களவைப் பற்றியும், இரத்னபாயின் சங்கதியைப்பற்றியும் இவனுக்கு ஏதேனும் தெரிந்திருக்குமென்பதே என் அபிப்பிராயம்." என்றார்.

கிருஷ்ணராவ் :—இரத்னபாய் காணமற்போன சங்கதி இவனுக்குத் தெரிந்திருக்கும் என்பது சம்பவிக்க முடியாத காரியமென்று நான் நினைக்கவில்லை.

கருணாகரம்பிள்ளை:—"முடியாததல்ல. அவனுக்குப் பணம்

கொடுத்து மறைந்திருக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்க வேண்டும். அல்லது அவள் பிடித்துக் கொண்டு போய் எங்கோ மறைத்து வைக்கப்பட் டிருக்கவேண்டும். எப்படி யிருந்தாலும் அப்பெண்ணைக் கண்டு பிடித்தே தீரவேண்டும்." என்றார். கிருஷ்ணராவ் "இந்நகரத்தில் இத்தகைய பெண் எம்மாதிரி மறைந்து போகலாகும் என்ற விஷயத்தை யறிந்த ஒரு ஆளைக் கண்டுபிடிக்க வேண்டும். அந்த ஆள் இந்த விவகாரத்தில் பிரியமுடைய ஆளாக விருக்கவேண்டும்." என்று கூறினன். கருணாகரம் பிள்ளை சற்றுநேரம் தம் மனதில் சிந்தித்தார்.

பிறகு "ஆ! அத்தகைய மாது எனக்குத் தெரியுமென்று நினைக்கிறேன். நீ தயவுசெய்து சற்றுநேரம் என் கூடச் சீர்திருத்தச் சங்கத்தின் கட்டிடம் வரையில் வருகிருயா? அதாவது அச்சங்கத்தின் தலைமைக் காரியாலயத்திற்கு" என்றார்.

அச்சமயம் டெலிபோன் மணி யடிக்கவும் கிருஷ்ணராவ் எழுந்து சென்று சங்கதியை யறிந்து துரைத்தன வக்கீலாகிய கருணாகரம் பிள்ளையை நோக்கி "உமது காரியாலயத்தி லிருக்கும் உமது காரியதரிசிகளில் ஒருவர் உம்மிடம் பேசவேண்டு மென்கிறார்" என்றான்.

கருணாகரம் பிள்ளை போய்ச் சங்கதியை யறிந்துவந்து உட்கார்ந்ததும் "ஜட்கா சுப்பன் இப்போதுதான் பிடிக்கப் பட்டானும்" என்றார்.

6—வது அத்தியாயம்.

ஜட்கா சுப்பன் பிடிக்கப் பட்டான் என்பதைக் கேட்டதே கருணாகரம் பிள்ளைக்கு மிக்க சந்தோஷமுண்டாய் விட்டது. அவர் கிருஷ்ணராவை நோக்கி "சத்தியாய் இவ்விஷயத்தைப் பற்றி நமக்குச் சரியான உளவுகள் அகப்படுகிற வரையிலாவது இவனை யடைத்துவைக்கலாம்" என்றார்.

அதன்பின் அவர், கிருஷ்ணராவ், ஜகநாதன் ஆகிய மூவரும் புறப்பட்டுக் கருணாகரம்பிள்ளை கூறியபடி சீர்திருத்தச் சங்கத்தின் தலைமைக் காரியாலயத்திற்குச் சென்றார்கள். அக்கட்டிடம் பத்தடுக்கு மாடிகளை யுடையது. இராஜாங்க விஷயங்களைப்பற்றிப் போராடும் சங்கங்கள், சபைகள், கட்சிக்காரர்கள் முதலிய அனைவருடைய காரியாலயங்களும் அக்கட்டிடத்தி லிருக்கின்றன. அதிலுள்ள ஏற்பாடுகளனைத்தும் மிக்க அற்புதமான விதமாக விருந்தன. அங்குள்ள ஒவ்வொரு இலாகாவிலும் வேலை மிக்க சுறு சுறுப்பாக நடந்துகொண்டிருந்தது. நகரத்தின் பல பிரிவுகளையும், அவ்வப் பிரிவுகளின் கட்சி பேதங்களையும், துரைத்தன முறைமையில் அததற்குள்ள அபிப்பிராயங்களையும் குறிக்கும் அநேகம் படங்களும், அக்குறிப்புகள், படங்களிலுள்ள நிறங்கள் இவற்றின் விவரங்களை யறிவிக்கப் பதிவுபுத்தகங்களும் அங்கிருந்தன.

அவ்விஷயங்களில் சம்பந்தப்பட்ட அனுபவங்கள், இன்னார் என்பது, தற்சமயம் நகரத்தின் இன்ன பிரிவிலுள்ளவர்கள் இன்னின்ன கட்சியைச் சேர்ந்தவர்கள் என்பது, குறித்த பிரிவில் இன்ன கட்சிக்காரர் இத்தனைபேரிருக்கிறார்கள் என்பது, கட்சியின் தலைவன் இன்னவன் என்பது, அவனுக்கு உதவி யின்னவன் என்பது முதலிய

இத்தகைய விவரங்களை யெல்லாம் படத்தைப்பார்த்தமாத் திரத்திலேயே கண்டு கொள்ளலாம்.

அக்கட்டிடத்தில், துரைத்தன வக்கீலும், இராஜாங் கக்கட்சிகளில் ஒரு பிரதான கட்சியின் தலைவருமாகிய கருணாகரம் பிள்ளையும் தமது காரியாலயத்திற்கு ஒரு பாகத்தை யேற்பாடு செய்துகொண்டிருக்கிறார். அந்த விடத்திற்கே அவர் கிருஷ்ணாராவையும் அவன் நண்பனான ஜகநாதனையும் அழைத்துச் சென்றார். அங்குச்சென்றதும் மூவரும் ஆசனங்களில் உட்கார்ந்தார்கள். கருணாகரம் பிள்ளை தம் மேஜைமேல் வைக்கப்பட்டிருந்த கடிதங்களை யெடுத்துப் பார்க்கத் தொடங்கினார்.

சுமார் பத்துப்பதினைந்து நிமிடங்கள் கழித்து அறை யின் கதவு திறக்கப்பட்டதும் சுத்தமான சாதாரண உடை யணிந்த ஒரு வாலிபமாது உள்ளே வந்தாள். அவள் உள்ளே இரண்டடி யெடுத்து வைத்ததும் தடுமாற்றத் தோடு நின்று, அங்கு ஏதோ ஆலோசனை நடக்கிறதாத லின் நாம் இச்சமயம் உள்ளே செல்லலாகாதென்று கரு திச் சட்டென்று திரும்பமுயன்றாள்.

அதற்குள் அவள் வரவைக்கண்ட கருணாகரம்பிள்ளை சட்டென்று தமது கரத்திலிருந்த கடிதங்களை மேஜைமேல் வைத்துவிட்டு, "ஆ! அழகாம்பாளம்மா! இச்சமயம் நான் சந்திக்க வேண்டிய ஆள் நீதான்." என்றார். அம் மாது தன்கரத்தில் ஒருகட்டுக் கடிதங்களைப் பிடித்தபடி புன்னகை புரிந்தாள். கருணாகரம்பிள்ளை துரிதமாக எழுந்து சென்று அவள்செவியில் இரகசியமாக இரண் டொரு வார்த்தைகளைக் கூறி, அவளை யுள்ளே அழைத்து வந்து உட்காரவைத்தார்.

அம்மங்கை நாகரீகமானவ ளென்பதும், கல்வியறி வுடையவ ளென்பதும், உலக அனுபவ முடையவ ளென்

பதும் அவள் முகத்தைப் பார்க்கும்போதே தெரிந்தன. அவள் காண்போர் உற்று நோக்கும்படியான அழகு வாய்ந்த முகமுடையவள். அவள் நயனங்கள் பரந்து நீண்டு ஆழ்ந்த அறிவின் பிரகாசத்தோடு ஜொலிக்கும் பார்வையுடையவைகளாக விருந்தன. அதோடு அவள் வாய்மையும் தைரியமும் நம்பிக்கையும் உடையவள் என்பது அவள் முகவிலாசத்தாலும் பார்வையாலும் நன்கு விளங்கியது. பார்வைக்கு அவள் வசீகரமானவள்.

கருணாகரம்பிள்ளை அழகாம்பாளுக்குக் கிருஷ்ணராவையும், ஜெகநாதனையும் அறிமுகமாக்கி வைத்து, கிருஷ்ணராவை நோக்கி "இந்த அம்மாள் மாதர் சுதந்தரத்தைப் பாதுகாக்கும் கூட்டத்தில் தலைவி யென்பதைப்பற்றி நீங்கள் கேள்விப்பட் டிருப்பீர்கள். எங்களுடைய அச்சிலாகா முழுமைக்கும் இந்த அம்மாள்தான் தலைவி. எங்களுக்காக ஜெயம் உண்டாகும் வண்ணம் போராடும் விஷயத்தில் மிக்க உழைப்பெடுத்துக் கொள்கிறார்கள்" என்றார்.

கிருஷ்ணராவ் அழகாம்பாளை நோக்கி "அம்மா! உன்னைக் காண நேர்ந்ததற்காக நான்மிக்க சந்தோஷமடைகிறேன். நானும் என் நண்பரும் உன்வேலைகளைப் பற்றி எவ்வளவோ கேள்விப்பட் டிருக்கிறோம் ஆனால் இதுகாறும் உன்னைக்காணும் சந்தோஷம் எனக்குக் கிடைக்கவில்லை" என்றான்.

ஜெகநாதன்:—"இந்த அம்மாள் பிரசித்திபெற்ற பெண்கள் கல்லூரியில் வாசித்துப் பட்டம் பெற்றவர்கள்; சில காலம் பத்திரிகாலயங்களில் வேலைசெய்து நல்ல அனுபவம் பெற்றபிறகே மாதர் சங்கத்தின் தலைமை வகித்தார்கள்" என்றான்.

அம்மாது வெளிக்கு அச்சு இலாகாவின் தலைமை வேலையைப் பார்த்தாலும் அந்தரங்கத்தில் அனேக இரக

சியமான சூழ்ச்சிகளை யெல்லாம் செய்ய உதவியாயிருக்க லாகும் என்று கிருஷ்ணராவ் உணர்ந்து கொண்டான். அதோடு இவள் நண்பர்களில் இலக்ஷ்மணசாமிப்பிள்ளை யொரு முக்கியமானவன் என்றும் உணர்ந்தான். அச்சிலா காவைக்கொண்டு அம்மாது செய்திருக்கும் காரியங்கள் கிருஷ்ணராவுக்கே மிக்க வியப்பை யுண்டாக்கியது.

கருணாகரம்பிள்ளை அம்மாதை நோக்கி "அழகாம் பாள்! ஐந்தாவது வீதியில் துர்க்கையன் தன் காரியாலத் தை யேற்படுத்திக்கொண் டிருக்கிறு னல்லவா, அங்கு யாரோ கள்ளடெலிபோன்வைத்து அங்குநடக்கும் சங்கதி களைக் கிரகித்துக் கொண்டார்கள். இச்சங்கதியை முதலில் உலகாம்பாள் வந்து என்னிடம் கூறினள். அவள் ஒரு நாள் அங்கு நடந்தவிருந்திற்குச் சென்றுளாம். தன்பெயர் எங்கே பகிரங்கத்திற்கு வந்துவிடுமோ வென்று மிகவும் பயந்துகொண் டிருக்கிருள்." என்றார்.

அதைக் கேட்டதும் அழகாம்பாள் "என்ன? உல காம்பாளா? விருந்துக்கு, மதுரநாயகம் பிள்ளையோடு கூடச்சென்றுளா? நான்-நான் ஒருபோதும் நம்பமாட் டேன்" என்றாள்.

கருணாகரம்பிள்ளை ஒருபதிலும் கூறவில்லை. உலகாம் பாளைப்பற்றி, அவருக்கு அதிகமாகத் தெரிந்திருந்தும் கூறமனமில்லைபோல் தோன்றியது. ஆனல் அவர் நடந்த சங்கதியைப் பற்றிமட்டும் சுருக்கமாகக் கூறிக்கொண்டே யிருக்கையில் அம்மாது குறிப்பாய் அவரை யுற்றுநோக்கி னள். கருணாகரம்பிள்ளை யதைக் கண்டுகொண்டாலும் காணாதவர்போல் அபிநயித்து "உலகாம்பாள் நான் ஒரு வன் அப்படிக் கள்ள டெலிபோன் வைக்கக்கூடியவன் என்று கருதியே யென்னிடம் வந்தாள் என்று தெரிந்து கொண்டேன். உண்மையில் இலக்ஷ்மணசாமிக்கும் துர்க்

கையனுக்கு மிருக்கும் இரகசியப் போராட்டத்தினல் இலக்ஷ்மணசாமியே அவ்வாறுசெய்தான்'' என்று கூறிவிட்டு அவள் முகத்தை யுற்றுநோக்கினர்.

ஆனல் அச்சமாசாரம் அழகாம்பாள் மனதில் அசட்டையான உணர்ச்சியை யுண்டாக்கின குறியே அவள் முகத்திலிருந்தது.

கருணகரம் பிள்ளை கூறத் தொடங்கி “இப்போதிருக்கிற விவகாரம் என்ன வெனில், இரத்னபாய் என்ற பெண்-இலக்ஷ்மணசாமிக்காக அக்கள்ள டெலிபோன் மூலமாகச் சமாசாரங்களைச் சேகரம் செய்தவள்; தெரியுமல்லவா அவள் - திடீலென்று மாயமாய் மறைந்துவிட்டிருக்கிருள். அவள் போய்விட்டால் அக்கறுப்புப் புத்தகம் அகப்பட்டாலும் நாங்கள் சங்கதியை ருசுப்படுத்த முடியாது. அந்த இரத்னபாய் இலக்ஷ்மணசாமி பிள்ளை-வில்வநாதம் பிள்ளை இவர்களின் வர்த்தக சங்கத்தில் டெலிபோன் இலிகிதன் வேலையிலிருந்தாள்'' என்ருர்.

இவற்றைக் கேட்டபோதுதான், முதல்முதலாக அழகாம்பாள் முகத்தில் ஒருவிதக் கலவரம் தோன்றியது.

கருணகரம் பிள்ளை மேலும் கூறத்தொடங்கி 'ஒரு சமயம் இவ்விஷயத்தில் தலையிட உனக்குப் பிரியமில்லாமலிருக்கலாம். ஆனல் நகரத்தில் பெண்களுக்கு இத்தகைய ஆபத்து நேரும் விஷயங்களில் நீ சிரத்தை யெடுத்துக் கொள்கிருய் என்பதை நான் அறிவேன். ஆதலின், இவ் விவகாரத்தில் நேராக நீயே வேலை செய்யாவிடினும் எங்களுக்கு ஆலோசனையேனும் கூறுவாய் என்று நினைத்தேன்'' என்ருர்.

அழகாம்பாள் “ஓ! அதைப்பற்றி யவசியமில்லை. நாம் முதலில் இரத்னபாய் என்ன விதமானுள் என்பதையே கண்டுபிடிக்க வேண்டும்.'' என்ருள். அவள் நாம் என்ற

வார்த்தையைக் கூறியபோது கருணாகரம் பிள்ளை சட்டென்று கிருஷ்ணாராவையும் ஜெகநாதனையும் நோக்கினார். அழகாம்பாள் கடைசியில் "இரத்னுபாயைப் பற்றி யின்னும் ஏதேனும் உங்களுக்குத் தெரியுமோ?" என்றாள்.

கருணாகரம் பிள்ளை முன்பு கிருஷ்ணாராவிடமும் ஜெகநாதனிடமும் கூறியவற்றை முழுமையும் அவளிடம் கூறினார். அழகாம்பாள், இரத்னுபாய் காணாமற்போன விஷயத்தில் மிக்க சிரத்தை யுடையவளாகக் காணப்பட்டாள். பிறகு அவர் தங்கள் ஆலோசனைகள், உத்தேசங்கள் முதலியவற்றைக் கூறியபோது, அவள் மாறான அபிப்பிராய முடையவளாகக் காணப்பட்டாள். காணாமற்போன அக்கன்னிகைக்கு என்ன நேர்ந்திருக்கும் என்பதைச் சிந்திக்கச்சிந்திக்க அவள் அவ்விவகாரத்தில் மிக்க கவலை கொண்டவளானாள்.

அழகாம்பாள் மாதர்களுக்கு முக்கியமாய்க் கன்னிகைகளுக்கு நகரில் நேரிடும் அக்கிரமங்களை விசேஷமாய்க் கவனித்துத் தடுக்க முயலும் குண முடையவளானதால் இவ் விஷயத்தில் தங்களுக்கு உதவியாய்ச் சேர்வாள் என்றே கருணாகரம் பிள்ளை எதிர்பார்த்தார்.

முடிவில் அழகாம்பாள் கண்களில் கோபத்தணல் வீச "அப் பெண்ணுக்கு மட்டும் துர்க்கையனலாவது மதுரநாயகம் பிள்ளையாலாவது ஏதேனும் கெடுதி நேர்ந்திருக்கும் பட்சத்தில் அவர்களில் ஒருவராவது தண்டனை யடையுமட்டும் நான் இளைப்பாற மாட்டேன்" என்றாள்.

அவள் அப்பெண் காணாமற்போன விஷயத்தில் இலக்ஷ்மணசாமியைச் சம்பந்தப்படுத்துகிறாளா என்பதையறியக் கிருஷ்ணாராவ் அவளை யுன்னிப்பாய்க் கவனித்துக் கொண்டே யிருந்தான். இலக்ஷ்மணசாமி அதில் சம்பந்தப்பட்டிருப்பா னென்று அவள் சந்தேகங்கூடக் கொள்

ளாதது கிருஷ்ணராவின் மனதை யதிகமாகக் கவர்ந்த தென்ற விஷயத்தை ஜெகநாதன் உணர்ந்து கொண்டான்.

அழகாம்பாள் "அவர்கள் தங்கள் துர்க்காரியங்களை நிறைவேற்றப் பலவிதமான வல்லமைகளை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். துரைத்தன விவகாரங்களில் தங் கள் கட்சி ஜெயம்பெற எத்தகைய வல்லமைகளைத்தான் உபயோகிப்பார்களோ நமக்கெப்படித் தெரியும்" என்றாள்.

கிருஷ்ணராவ் சிந்தனையோடு அறையில் உலவிக் கொண்டே "அடுத்தபடியாக நாம் கவனிக்க வேண்டிய விஷயம் இப்போது எதைச்செய்யத் தொடங்குவ தென் பதே. முதலாவதாக அந்தச் சின்ன மாளிகையைச் சோதிக்க வேண்டியது. அது எப்படி நடப்பது? தாங் களே நேராய் அங்குச்சென்று சோதனை செய்ய விரும்ப மாட்டீர்களென்று நினைக்கிறேன்" என்றான்.

கருணாகரம் பிள்ளை:—உண்மையாகவே முடியாது. இந்த விவகாரம் இதோடு நிறுத்தப்பட வேண்டுமானால் நான் அவ்வாறு செய்ய வேண்டும். நான் வெளியில் சென்றால் ஒரு சந்து திரும்புவதற்குள் அனேகர் என்னை யறிந்து கொள்வார்கள். என்னைத் தெரிந்து கொள்ளாதவர்களோ தெரிந்துகொள்ளக் காத்திருக் கிறார்கள். இதைவிட நீ யதில் பிரவேசித்தால் நான் உன்னை யாரும் கவனிக்காதபடி வெளியிலிருந்து வேலை செய்வேன். உண்மையில் நான் அவ்வாறே செய்யக் கருதி யிருக்கிறேன். நான் பின்னாலிருந்து வேலை செய்வதே நலம். நான் என்ன செய்ய விரும் புகிறே னென்பதைக் கூறுகிறேன்." என்று கூறி விட்டுத் தட்டென்று பேச்சை நிறுத்திவிட்டார்.

அதை யறிந்த கிருஷ்ணராவ் "என்? என்ன தடு மாற்றம்?" என்றான்.

கருணுகரம் பிள்ளை:—ஏனெனில், ஒரு யோசனை யிருக்கிறது. அது உனக்குப் பிடிக்குமோ பிடிக்காதோ— என்பதே.

கிருஷ்ணுராவ்:—மிக்க வந்தனம். கூறும் கூறும்.

கருணுகரம் பிள்ளை:—"அச்சுதன் என்ற வாலிபன் தெரியுமல்லவா?" என்ருர்.

கிருஷ்ணுராவ் "ஒரு இலக்ஷாதிகாரி மகன். அந்த இலக்ஷாதிகாரி வீண் காரியங்களில் பணத்தைச் செலவழிக்கிருனென்று பத்திரிகைகள் கேலி செய்கின்றனவே..." என்றதும் கருணுகரம் பிள்ளை "ஆம். ஆம். அவன் என் கக்ஷியில் வேலை செய்துகொண்டிருக்கிருன். மிக்க அக்கரையோடு வேலை செய்பவன். அவன் சொந்தத்தில் அனேக ஆட்களை வைத்துக்கொண்டிருக்கிருன். அவர்களில் கண்ணம்மாள் என்ற ஒரு துப்பறியும் பெண் இருக்கிருள்—அவளே அக்கூட்டத்தின் மூளை யெனலாம் நீ அவர்களை, அல்லது அக்கண்ணம்மாளை மட்டுமாவது உனக்குத் துணையாக வைத்துக் கொண்டு வேலை செய்வதாயின்..." என்றதும்,

கிருஷ்ணுராவ் நகைத்துக் கொண்டே "ஹா! நான் தெரிந்து கொண்டேன்-தொழிலாளிக்குப் பொருமை யுண்டாகுமோ-அதனுல் பாதகமில்லை. இது நான் முன்னமே யெண்ணிக்கொண்டிருக்கும் நோக்கத்தை நிறைவேற்றிவிட்டது. இந்த விவகாரத்தில் நமக்கு மிக்க புத்தி சாமர்த்தியமும் தந்திரமுமுடைய ஒருமாது கட்டாயம் வேண்டியதே. நாம் அவசியம் கண்ணம்மாளை வரவழைத்து அவளால் பெறக்கூடிய உதவியைப் பெற்றுக் கொள்வோம்" என்ருன்.

அழகாம்பாள்:—"ஆம். இது வேறு யாராலும் நடந்திராது. ஜட்கா சுப்பனுடைய கூட்டத்தாரின் சேஷ்டையே

யிது. அப்படித்தா னிருக்கவேண்டும். மற்ற எல்லாக் கூட்டத்தைக் காட்டிலும் அவர்களே அனேகம் பெண்களைப் பிடித்துப்போய் அனேக அக்கிரமங்களைச் செய்திருக்கிறார்கள்." என்று கூறிவிட்டுக் கருணாகரம் பிள்ளையை நோக்கி "ருசுவுகள் சேகரம்செய்வதில் என் உதவிவேண்டுமாயின் செய்வதற்கு நான் ஆயத்தமாக விருக்கிறேன். அந்த ஜட்கா சுப்பன் மேல் வஞ்சம் தீர்த்துக்கொள்ளப் பல காரணங்கள் இருக்கின்றன." என்றாள்.

கருணாகரம் பிள்ளை "மிக்க வந்தனம். நாங்கள் ஏதேனும் செய்வதாயின் உன் உதவி அவசியம் வேண்டியதே. இச்சமயம் சொல்ப குற்றங்களுக்காகத்தான் அவனைப் பிடிக்கலாகும். இலக்ஷ்மணசாமியின் பெட்டியி லிருந்து புத்தகம் களவு போனதைப்பற்றி அக்கூட்டத்தாருக்குத் தெரியலாகும். ஒரு சமயம் இரத்னபாய் காணமற் போனது தெரியாவிடினும் அக்களவைப்பற்றித் தெரிந்திருக்கும் என்றே நம்புகிறேன்" என்றார்.

அழகாம்பாள்:-"அக்கள்ளப் பயல்கள் தாங்கள் தப்பித்துக் கொள்வதற்காக எத்தகைய காரியத்தைச் செய்யவும் பின்னிடைய மாட்டார்கள். எப்படி யிருந்தாலும் என்னிட மிருக்கும் பல கூட்டங்களுக்கும் உளவறியும்படி கட்டளை யிடுகிறேன். அதுகாறும் தாங்கள் அவனைப் பிடித்து வைத்திருப்பது நலம்" என்றாள்.

கருணாகரம் பிள்ளை "நான் எவ்விதமாகவேனும் நீ கூறியபடி செய்கிறேன். இவ்விஷயத்தில் நீ இவ்வளவு சிரத்தை யெடுத்துக் கொள்வதற்காக நாங்களனைவரும் உனக்கு நன்றி செலுத்த மிக்க கடமைப்பட்டிருக்கிறோம்" என்றார்.

அதன் பிறகு அழகாம்பாள், காணமற் போன

இரத்னுபாயின் அங்க அடையாளங்கள், அவள் விலாசம், அவளைப்பற்றிய சங்கதிகள் முதலிய யாவற்றைப்பற்றியும் தன் புத்தகத்தில் குறிப்பிட்டுக்கொண்டாள். அவற்ருேடு இதில் வேலை செய்வதற்காகத் தான் யாராரை ஏவக் கருது கிருளோ அவர்கள் பெயர்களை யெல்லாம் குறித்துக் கொண்டாள். ஒருபெயரை எழுதும்போது சற்று தடு மாற்றமுற்றுப் பிறகு துணிகரமாக அதையும் வரைந்து விட்டாள்.

பிறகு "இவ்விஷயமாய் இலக்ஷ்மண சாமிப்பிள்ளை யைக்கூடக் காணப்போகிறேன். கடைசியில் அவனும் ஏதேனும் முக்கியமான சமாசாரம் வெளியிடலாகும்" என்று வெளிப்படையாகக் கூறினுள். அவள் மிக்க துணி கரத்தோடேயே இக்கடைசித் தீர்மானத்தைச் செய்தாள். இவ்விஷயத்தில் தன்னுல் ஆன யாவும் செய்வதென்றும், இலக்ஷ்மணசாமிப் பிள்ளைக்கு மனவருத்தம் நேர்வதாயி னும் நம் கடமையைச் செய்தே தீருவதென்றும் அவள் துணிவு கொண்டிருக்கிருள் என்பதை யுணர்ந்து கருணு கரம் பிள்ளை மிக்க திருப்தியடைந்தார்.

பிறகு அவள் தன் புத்தகத்தை மூடி வைத்துக் கொண்டு "சற்று உயர்ந்த அந்தஸ்திலிருக்கும் ஜனங்கள், இத்துஷ்டக் கூட்டங்கள் தங்களுக்கு எவ்வாறு தீங்கிழைக் கின்றனவென்பதைக் கவனிப்பதேயில்லை. அவர்கள் ஏதோ வேறு உலகத்தைச் சேர்ந்தவர்கள் என்று கருதுகி ருர்கள். யாவரும் ஒரே கூட்டத்தில் புழங்கிக்கொண்டிருக் கிருேமென்று அவர்கள் உணர்வதில்லை" என்ருள்.

கருணுகரம் பிள்ளை:—"அது உண்மையே. இப்போது இந்த விவகாரத்தையே அத்தாட்சியாய் எடுத்துக் கொள் வோம். இந்த விஷயம் வடக்கு வீதியில் முளைத்து, கள்ளர் வீதிக்குச்சென்று அங்கிருந்து பூமியின்

கீழிருக்கும் சட்கா சுப்பனுடைய இரகசிய அறைகள் வரையில் செல்கின்றது'' என்றார்.

அழகாம்பாள்:—பெரிய—கொள்ளைக் கூட்டங்கள்—இதைக் கேட்டதே எனக்கு உலகாம்பாள் நினைவு வருகிறது. நான் அவளைக் கண்டு அவள் கணவனிடம் வரும் சில நண்பர்களைப்பற்றி எச்சரிக்கை செய்யவேண்டும்'' என்றதே,

கருணாகரம் பிள்ளை:—நான் அந்தக் கள்ள டெலிபோன் விஷயமாகக் கூறிய விஷயத்தை நான் கூறியதாகப் பிரஸ்தாபிக்கவேண்டாம். இச்சமயத்தில் அப்படிக் கூறுவதால் நன்மைக்கு பதிலாகத் தீமையே பெரும்பாலும் உண்டாகும். கொஞ்சக் காலம் வரைக்கு மேலும் நாங்கள் மறைவிலேயே யிருப்பது நலம் என்று கருதுகிறேன்'' என்றார்.

அவர் அவ்வாறு கூறிய காரணம் உண்மையோ அபிநயமோ அதன் விவரம் கூறமுடியாது. அவர் தம் வார்த்தையை யாமோதிக்கும்படி கிருஷ்ணராவைக் குறிப்பாய் நோக்கினர். அவர் கருத்தை யுணர்ந்த கிருஷ்ணராவ் "நானும் அப்படியே கருதுகிறேன். தற்காலத்திற்கு—அக்கறுப்புப் புத்தகத்தைப்பற்றி நாமறிந்த வரையில்—நான் அறிந்த வரையில் அழகாம்பாள் தன் வரையில் வாக்களித்தபடி தன் காரியத்தைப் பூரணமாகச் செய்வார்கள் என்று நம்புகிறேன். இந்த அம்மாள் நம்மோடு இவ்வளவு மனங் கலந்து உதவி செய்யத் துணிந்ததற்கு நான் மிக்க வந்தனமளிக்கிறேன்'' என்றான்.

7—வது அத்தியாயம்.

மேற்கண்ட சம்பவங்கள் நடந்த அரைமணி நேரங் கழித்துக் கிருஷ்ணராவின் இரசாயனசாலைக் கதவு திறக்கப்பட்டதும் ஒரு வாலிபமாது வந்து, "கிருஷ்ணராவ் இருக்கிறாரா?" என்று கேட்டாள்.

கிருஷ்ணராவ் "ஆ! கண்ணம்மாள்!" என்று ஆவலோடு எழுந்து சென்று அவள் கரத்தைப்பற்றிக் குலுக்கி அழைத்து வந்து ஆசனத்தில் உட்கார வைத்தான். ஜெகநாதன் எப்போதும்போல் கிருஷ்ணராவ் கூடவே யிருக்கிறான்.

வந்த மாது கரியகூந்தலும், சந்திரப் பிறைபோன்ற பளபளப்பான நெற்றியுமுடையவள். அவளுடைய கண்களின் பிரகாசத்தால், அவள் ஸ்திரீயாகவிருப்பினும் தன் எதிரிலுள்ளோரின் இருதயங்களை யூடுருவிப் பார்க்கத் தக்க மிக்க சூக்குமமான அறிவுடையவளென்பது நன்கு விளங்கியது.

ஜெகநாதன் அவள் விஷயங்களில் சிலவற்றைப்பற்றி முன்னமே கேள்விப்பட்டிருக்கிறான். அவள் முதலில் இராஜாங்க விஷயத்தில் வேலை செய்யும் ஒரு கட்சியாருக்காக ஒரு விவகாரத்தில் தலையிட்டுத் துணிகரமாய்த் தைரியத்தோடு தன் புத்தி சாதுரியமனைத்தும் காட்டி வேலை செய்தாள். அதுதான் அவளுடைய முதலாவது துப்பறியும் முயற்சி. அப்போது அவள் அடைந்த அனுபவத்தால், "நாம் பெண்பாலாயினும் துப்பறியக்கூடிய ஒரு மாதுக்குத் திருப்திகரமாய் வேலை செய்யக்கூடிய வழியிருக்கிறது. பெண்பாலாக விருப்பதால் அதற்கு மிக்க அனுகூலமே" என்று உணர்ந்தாள். அதுமுதல் அவள் வேறொருவர் உதவி யின்றித் தன் முயற்சியாலேயே, பிர

சித்தி பெற்ற துப்பறியும் ஆடவர்களோடு போட்டி போட்டு வேலை செய்யத் தக்க துப்பறிபவளாய் விட்டாள்.

ஜெகநாதன் கண்ணம்மாளையும் கிருஷ்ணராவையும் உற்று நோக்கியபடி யிருந்தான். ஏனெனில் இருவரும் முதல்தரமான துப்பறிபவர்கள். இப்போது நடக்க வேண்டிய விஷயத்தில் இவர்சள் இருவரும் எப்படிக் கலந்துகொள்ளப் போகிருர்களோ என்பதைப் பார்க்க வேண்டும் என்று அவன் வியப்போடு பார்த்துக்கொண்டேயிருந்தான்.

கண்ணம்மாள் உள்ளே வந்ததும் தாராளமாய் முக மலர்ச்சியோடு இருவர் கரங்களையும் பற்றிக் குலுக்கிப் புன்னகையோடு ஆசனத்திலமர்ந்ததும், எடுத்ததே நேராக, "கருணுகரம் பிள்ளையவர்கள் இன்று காலை ஒரு அநாமதேயக் கடிதத்தைப் பெற்றதாகக் கூறினர்கள்; அதை நான் பார்க்கலாகுமா?" என்ருள்.

இவ்வாறு ஒரு பெண்பால் விவகாரம் நடத்துவது மிக்க அரிது. ஆடவரில் கெட்டிக்காரனுகிய துப்பறிபவன் கூட எடுத்ததே விவகாரத்தைத் துணிந்து வெளியிட மாட்டான். நம்மோடு பேசுகிறவர்கள் எத்தகைய குணமுடையோரோ என்று கலக்கமடைந்து அவர்களோடு சற்றுநேரம் சம்பாஷித்த பிறகே தன் காரியத்தைக் கூறத் துணிவான். ஆனல் கண்ணம்மாளோ முதலில் ஒரு ருசுவும் வெளிப்படையாகத் தோன்ருதிருக்கும்போதே விஷயத்தின் உண்மையை யறிந்து கொள்ளும் கூர்மையான புத்தி சாமார்த்தியமுடையவள். மிக்க கெட்டிக்காரனை ஒவ்வொரு துப்பறிபவனுக்கும் அச்சாமர்த்தியம் இருக்கவே யிருக்கும். ஆயினும் கண்ணம்மாளிடம் அது மிக்க அதிகமாகவிருந்தது. அது மட்டுமல்ல. அவள் ஒருவர்

உதவியுமின்றித் தானே நடந்த உண்மையையும், அதை நிரூபிப்பதற்கு அவசியமான அத்தாட்சிகளையும் கண்டு பிடிக்கும் சாமார்த்தியமுடையவள். அவள் அடிக்கடி "சாதாரணமாக நீதிச் சபையில் ஒரு பெண்பாலின் சாட்சியத்தை முக்கியமானதென்று ஏற்றுக்கொள்வதில்லை. ஆனால் கோர்ட்டார் நம்பத்தக்க ருசுவுகளில் அனேகம் மாதர் மூலமாகவே கண்டறியப்பட்டவையென்று நான் நன்கறிவேன்" என்று கூறுவதுண்டு.

அவள் கேட்ட அநாமதேயக் கடிதம் அவளுக்குக் காட்டப்பட்டதும் அவள் அதை முழுமையும் வாசித்துப் பார்த்தபின், "இத்தகைய விஷயத்தில் என் தொழில் முறைமையில் நான் நெருங்கிப் பழகியிருப்பதால், விஷயங்களை யறியவும், அவசியமான அத்தாட்சிகளைச் சேகரம் செய்யவும் எனக்கு நல்ல சந்தர்ப்பம் கிடைத்தது. ஆதலின் இக்கடிதம் எனக்கு வியப்பை யுண்டாக்கவில்லை. என் ஆட்கள் கொஞ்சக்காலமாக அந்த விடத்தின்மேல் கண் வைத்துக்கொண்டுதா னிருக்கிறார்கள்" என்றாள்.

கிருஷ்ணராவ்:—அப்படியாயின் அந்த விடத்தைப் பார்க்க வேண்டுமென்றே நீ கருதுகிறாய்?

கண்ணம்மாள்:-"கட்டாயமாய்ப் பார்க்கவேண்டும். ஆனால் இக்கடிதத்தை நான் பார்க்கா விட்டால் அப்படிச் செய்ய மாட்டேன் என்று நினைக்கிறேன். அப்படியிருந்தாலும் நான் அறிந்தவரையில் அந்தச் சின்ன மாளிகையோடு சம்பந்தப்பட்ட ஒரு கூட்டம் இருக்கிறதென்றும், அதுகண்டு பிடிக்கப்படாமலே யிருக்கிறதென்றுமே நம்புகிறேன். திருட்டாந்தமாக ஒன்று கூறுகிறேன். அங்கிருக்கும் மனிதர்களோடு சம்பந்தப்பட்ட ஒருபோக்கிரி யிருக்கிறானென்று என் ஆட்

கள் கூறுகிறார்கள். அவன் கிழக்கிலிருந்து இங்கு வந்த ஒரு முரடன். அவன்பெயர் ஈட்டித்தானன். என் ஆட்கள் அவனை யங்குப் பார்த்ததாகக் கூறுகிறார்கள். அங்கு நானே சென்றதில்லை. எனக்கு உடனே பலனளிக்கக் கூடிய ஏராளமான வேலை வேறிடத்தில் இருந்தது. ஆயினும் உங்கள் உதவியோடு அச் சின்னமாளிகை என்றவிடத்தையும் சோதிக்க எனக்கு மிக்க பிரியமே'' என்றாள்.

கிருஷ்ணராவ்:—கடிதத்தின் மற்றபாகத்தைப்பற்றிஎன்ன நினைக்கிறாய்?

கண்ணம்மாள்:—"நான் கேள்விப்பட்டதிலிருந்து கடிதத்தில் குறிப்பாகக்கூறப்பட்டவர்களில் சிலர் யாரென்று உத்தேசமாய்க் கூறக் கூடுமென்று நினைக்கிறேன். நிச்சயம் என்று திடமாகக்கூற முடியாவிடினும், ஒரு வக்கிலென்றது கனகசபையென்ற ஒருவனாக இருக்க வேண்டுமென்று நினைக்கிறேன். அவன் வேலையில் கெட்டிக்காரனே. ஆனால் இராஜாங்க சம்பந்தமான விவகாரங்களில் அவனுக்கு நல்ல பெயரில்லை. கிதித் தலைவன் என்றது இலக்ஷ்மணசாமிப் பிள்ளையாக விருக்கலாம். மற்றொரு கூட்டத்தில் சேர்ந்த ஆள் என்றது உலகாம்பாள் கணவனாகிய மாரப்பன் என்று நான் உத்தேசிக்கிறேன்'' என்றாள்.

அவள் வார்த்தைகளைக் கேட்ட கிருஷ்ணராவும் ஜெகநாதனும் வியப்போடு ஒருவரை யொருவர் நோக்கினார்கள். கடைசியில் கிருஷ்ணராவ் "முதற்படியாக நான் இரத்னுபாய்க்கு ஒரு கடிதம் எழுதிச் சின்னமாளிகையாட்கள் பார்வையிட்டுக் கொடுப்பதென்று அனுப்புகிறேன். அல்லது கண்ணம்மா! கடிதத்தை யுன்கைப்படவே யெழு

தலாம். ஸ்திரீ எழுதினுல் அவ்வளவாய்ச் சந்தேகம் தோன்ருது" என்ருன்.

கண்ணம்மாள் நான் என்னவென் றெழுத என்று கேட்டாள். கிருஷ்ணுராவ். "இரண்டொருவரி. நீ அவள் வேலைசெய்யும் காரியாலயத்தி லிருப்பவளென்றும், அவள் சின்னமாளிகையி லிருப்பதாய் நீ கேள்விப்பட்டதாகவும் எழுதி இன்னும் ஏதேனும் எழுது. கடிதம் எப்படியெழுதினுலும் பாதகமில்லை. அதன்மேல் என்ன நடக்கிறதென்று பார்க்கவே நான் கூறுவது." என்ருன்.

கண்ணம்மாள் உடனே ஒருகடிதம் எழுதிக் கிருஷ்ணுராவிடம் கொடுத்தாள். கிருஷ்ணுராவ் தன்னிடமிருந்து ஒருசாதாரணக்கடித உறையெடுத்து அதில் கண்ணம்மாளை விலாசம் எழுதச்சொல்லி, எழுதியானபின் அரக்குமுத்திரையிட்டு ஜகநாதனிட மளித்துத் தபாலில் போடும்படி கூறினுன். பிறகு கண்ணம்மாளை நோக்கி "அம்மா! நீ தயவுசெய்து இங்கேயே போசனம் செய்யும்படி நான் கேட்டுக் கொள்ளுகிறேன். பிறகு அடுத்தபடி என்ன செய்யலாம் என்பதைப் பற்றிச் சிந்திப்போம்" என்ருன். கண்ணம்மாள் சந்தோஷமாக 'அவ்வாறே செய்கிறேன்' என்ருள்.

கால்மணி நேரத்திற்குள் ஜகநாதன் கடிதத்தைத் தபாலில் போட்டுவிட்டுத் திரும்பிவந்தான். கிருஷ்ணுராவ் "இந்தச் சின்னமாளிகை என்ற இடத்தைப்பற்றி நன்ருக அறிந்து கொள்ள வேண்டியது இந்தச்சமயம் நமக்கு மிக்க முக்கியமானது. ஏன் கண்ணம்மா? நீயும் எங்களோடு சேர்வாயல்லவா?" என்ருன்.

கண்ணம்மாள்:— "கட்டாயமாய். அந்தச் சின்னமாளிகையை மூடிவிடுவதற்கு வேண்டிய ருசுக்களைக்கண்டுபிடிக்கவேண்டியது மிக்க அவசியம்" என்ருள்.

கிருஷ்ணராவ் "நாம் மூவரும் அங்குச்சென்று ஒரு அறையெடுத்துக்கொண்டு, போஜனம் அதற்கருகிலுள்ள ஒரு ஹோட்டலில் செய்துகொண்டு வந்து அங்கேயே நடமாடிக்கொண்டிருந்தால் நாம் போராடவேண்டிய ஆசாமிகளின் தன்மையைப்பற்றி அறிந்து கொள்ளலாமல்லவா? நீ எப்படி நினைக்கிறாய்?" என்றான்.

கண்ணம்மாள் நகைத்துக்கொண்டே "அது நல்ல வேடிக்கையே. எதிரிகளின் எல்லைக் குள்ளாகவே நமது ஏற்பாடுகளைச் செய்வதாகும். அவர்கள் அறிந்துகொள்ளாத விதமாய் நாம் நடந்துகொள்ள வேண்டும். அங்கிருந்தால் இந்த அநாமதேயக் கடிதத்தில் குறிப்பிட்ட சில ஆசாமிகளை நாம் காணக்கூடும்" என்றாள்.

சின்னமாளிகை என்பது, பெரிய தெருவிலுள்ள ஒரு குறுக்கு வீதியில் இருக்கிறது. அது பத்தடுக்கு மாடிகளுள்ள ஒரு புதுமாதிரிக் கட்டிடம். நகரிலுள்ள அநேகம் நாணயமான ஹோட்டல்களைப் போலவே அதுவும் பார்வைக்கு ஒரு ஹோட்டலாகவே தோன்றும். ஒரு ஆணும் ஒரு பெண்ணுமாகிய இரண்டு பிரசித்திபெற்ற துப்பறியும் ஆசாமிகளும் ஜெகநாதனும் எப்படித் தங்கள் காரியத்தைத் தொடங்குவதென்பதைப் பற்றித் தீர்க்காலோசனை செய்து கடைசியில் முதலில் இருவர்மட்டும் செல்வதென்று தீர்மானித்துக் கொண்டார்கள்.

கடைசியில் புறப்படும்போது ஒரு ஆள் பின்னால் வந்து சேர்வதாயின் சந்தேகத்திற் கிடமுண்டாகும் என்று கருதி மூவருமே யொருவண்டியி லேறிக்கொண்டு புறப்பட்டார்கள். வண்டி சின்ன மாளிகையின் எதிரில் சென்று நின்றதும் மூவரும் கீழிறங்கினார்கள். கிருஷ்ணராவும் கண்ணம்மாளும் வேடிக்கையாய்க் காலங்கழிக்கச் செல்லும் நண்பர்கள்போல் நகைத்துக் கொண்டும் பேசிக்

கொண்டும் முன்னே ஹோட்டலுக்குள் நுழைந்தார்கள். ஜெகநாதன் வண்டிக்காரனுக்குக் கூலி கொடுத்துவிட்டு இரண்டடி அவர்கள் பின்னால் சென்றான்.

இவர்கள் உள் வாயிற்படியில் சென்றதும் அங்கிருந்த மணி யடிக்கும் கயிற்றை யிழுத்தார்கள். உடனே நாணய மாய் உடையணிந்த ஒரு வாலிப வேலைக்காரன் வந்து கதவைத்திறந்து இவர்களுக்கு வந்தனமளித்து விலகினின் றான். மூவரும் உள்ளே சென்றார்கள். முன் கூடத்தில் கீழேயுள்ள சலவைக் கற்களின்மேல் மிருதுவான விலை யுயர்ந்த இரத்ன ஜமக்காளம் விரிக்கப்பட் டிருந்தது. இடையிடையில் சீனத்தொட்டிகளில் பிரகாசம் பொருந் திய புஷ்பங்கள் மலர்ந்துள்ள செடிகள் வைக்கப்பட்டிருந் தன. இப்புஷ்பத் தொட்டிகளுக்கிடையில் வெண்மையான சலவைக்கற்களால் செய்யப்பட்ட அழகிய சிலைகள் நிறுத் தப்பட் டிருந்தன.

முன்னே செல்லும் கிருஷ்ணராவும், கண்ணம்மாளும் அங்கிருந்த அலங்காரங்களையும் விலைபெற்ற ஸோபாக்கள் நாற்காலிகள் படங்கள் முதலியவற்றையும் அவ்வளவாகக் கவனிக்காதவர்கள்போல் நேராய் ஒரு உட்காரும் அறைக் குள் பிரவேசித்தார்கள். அந்த அறையும் மிக்க அழகாய் அலங்கரிக்கப்பட்டிருந்தது. கிருஷ்ணராவ் அங்கிருந்த ஒரு நாற்காலியை யிழுத்துக் கண்ணம்மாளை யதில் அமரச் செய்தான். அந்த அறைக்கருகில் ஹோட்டலின் காரியா லயம் இருந்தது. அதற்கு அப்பால் ஒரு பெரிய அறையி லிருந்து சங்கீத கோஷ்டமும், அப்போதைக்கப்போது ஜனங்கள் சிரிக்கும் சத்தமும், கேளிக்கையின் கோஷ்ட மும் கேட்டன.

அச்சமயம் அப்பக்கம் சென்ற ஒரு வேலையாளை நோக்கிக் கிருஷ்ணராவ் "ஆ! இங்கே வா!" என்றான்.

அவன் அருகில் வந்ததும் அவனிடம் அரைரூபா யளித்து, "உங்கள் மேஸ்திரியைக் கூப்பிட்டு வருகிறாயா? ஆ-அவன் பெயர்?" என்றதே அந்த ஆள் "ஜம்புசாமி" என்றான். கிருஷ்ணாராவ் "ஆம் ஆம். அவனை யழை" என்றான். வேலையாள் "ஆகா-இதோ ஒரு நொடியிலழைத்து வருகிறேன். அவர் போஜன அறையிலிருக்கிறார். அவர் சங்கீதக்காரரிடம் ஏதோ சச்சரவிலிருக்கிறார். சங்கீதக்காரரில் ஒருவன் நேரங்கழித்து வந்தான்" என்றான்.

இவர்கள் உட்கார்ந்து உள்ளேயிருந்து தாழ்வாரத்திற்குப் போகிறவர்களையும் வருகிறவர்களையும் பார்த்துக் கொண்டிருந்தார்கள். இரண்டொரு நிமிடங்களில் ஜம்பு சாமி என்பவன் கிருஷ்ணாராவிடம் வந்தான். அவன் நெட்டையான வாலிபன். கிருஷ்ணாராவ் அவனிடம் இரண்டொரு வார்த்தைகள் பேசிவிட்டு அவன் கையில் என்னமோ அளித்தான். அது அவனைக் கிருஷ்ணாராவுக்கு வசியம் செய்துவிட்டது. அவன் இவர்களை யுடனே மேல்மாடிக்கு அழைத்துச் சென்றான்.

ஜம்பு என்பவன் இவர்களை ஒரு பெரிய போஜன அறைக்கு அழைத்துச் சென்றான். அதற்குள் இன்னொரு அறை யிருந்தது. அந்த அறைகள் மிக்க அழகாக அலங்காரம் செய்யப்பட்டிருந்தன. வேலைக்காரரின் தலைவன் அவர்களை யங்கு விட்டுவிட்டு "எதற்காகவேனும் ஆளை யழைக்கவேண்டி யிருந்தால் இதோ சுவரிலிருக்கும் இப் பொத்தானை யழுத்துங்கள்" என்று கூறிவிட்டுச் சென்றான்.

இவர்கள் இருக்கும் இரண்டறைகளில் பெரிய அறையில் ஒரு அழகான போஜனம் செய்யும் மேஜையும், அனேகம் அழகிய நாற்காலிகளு மிருந்தன.

நமது கதை மேல்நாட்டில் நடந்ததென்பதையும், மேல்நாட்டு ஆசாரத்தை யொட்டியே இருக்குமென்பதை

யும் இதை வாசிக்கும் நண்பர்கள் உணரவும் கவனிக்கவும் நாம் கோருகிறோம். இவை யாவற்றையும் நமது நாட்டு ஆசாரப்படி மாற்றி யெழுதப்புகுந்தால் கதையின் சாரம் குறைந்துவிடும். அங்கு நேரும் அனேக விஷயங்கள் நமது ஆசாரமுள்ள இடத்தில் நேரா. நேரவும் வழியில்லை. இக் காலத்தில் நாவல்வரைவோரில் சிலர், உண்மையில் ஆங் கில நாவல்களைப் பார்த்தே எழுதுவதாயினும், தாமே சொந்தமாய் எழுதியதாக யாவரும் மதிக்கவேண்டுமென்ற அற்ப இச்சையால், நமது நாட்டிலேயே தாங்கள் எழுதும் நாவலிலுள்ள சம்பவங்கள் நடந்ததுபோல் எழுதி, மூல நூலிலுள்ள விஷயங்களில் சிலவற்றை மாற்றி விடுகிறார் கள். ஆயினும் நமது ஆசாரத்திற்கு மாறுகிய மேல்நாட்டு ஆசாரமும் நடவடிக்கைகளும் எப்படியேனும் அவற்றில் கலந்தே வந்துவிடுகின்றன. ஏனெனில் அவற்றை யடி யோடு நீக்கினால் கதையில் சம்பவங்களை வெளியிட முடி யாது. அந்தோ! இவர்கள் இல்லாத கௌரவத்திற்கு ஆசைப்பட்டு இப்படிச் செய்வதால், அன்னிய நாட்டார். இவர்கள் எழுதும் கதைகளை வாசிக்கும்போது நமது நாட்டிலும் அவர்கள் நாட்டிலுள்ள ஆபாச ஆசாரங்களே இருந்திருக்கின்றனவென்று எண்ணிக்கொள்ள நேர்கிறது. இத்தகையோரால் நமது முன்னோர்களால் ஏற்படுத்தப் பட்ட உயர்ந்த ஆசார ஒழுக்கங்களுக் குண்டாகும் இழி வைப்பற்றி முகவுரையில் விரிவாய்க் கூறி யிருக்கிறோம். இதை வாசிப்போர் இதுகாறும் முகவுரையை வாசிக்கா திருந்தால் தயவுசெய்து உடனே அதை வாசித்து அதி லுள்ள உண்மையை யறிந்துகொண்டு பிறகு இதற்குப் பின்னால் வாசிக்க விரும்புகிறோம்—வேண்டிக் கொள்கி றோம். மேல் நாட்டு ஆசாரங்களால் உண்டாகும் கெடுதி களை நம்நாட்டார் நன்கறியும் பொருட்டே அந்த ஆசாரத்

தின்படி ஆங்கில நாவலிலுள்ளதை மாற்றுமலே நாம் எழுதி வருகிறோம். மேல்நாட்டு ஆசாரத்தையே பின்பற்ற வேண்டுமென்ற மந்தமதியினர் அதனல் விளையும் தீங்கு களை யறியவேண்டு மென்பதே நமது முதன்மையான, மனப்பூர்வமான நோக்கம். இனி கதையைத் தொடங்கு வாம்:

கிருஷ்ணுராவ் முதலிய மூவரும் முன் அறையில் உட் கார்ந்தபின் அங்குள்ள அறைகளின் அலங்காரங்களைப் பற்றிச் சற்றுநேரம் பேசியபின் கிருஷ்ணுராவ் வேலைக் காரரின் தலைவனுகிய மேஸ்திரி கூறியபடி சுவரிலுள்ள பொத்தானை யழுத்தினுன். இரண்டு நிமிடங்களுக்குள் மிக்க நாணயமும் பகட்டுமான உடையணிந்த ஒரு ஆள் வந்து என்ன கட்டளை யென்முன். கிருஷ்ணுராவ் "எங் களுக்கு இராப் போஜனத்திற்கு முன் கொஞ்சம் சிற் றுண்டி கொண்டுவா" என்முன்.

அந்த ஆள் சென்று இராஜ போசனத்திற்குச் சம தையான பலகார வகைகளைக் கொண்டுவந்து படைத் தான். ஏனெனில் ஆரம்பத்தில் கிருஷ்ணுராவ் நடந்து கொண்ட மாதிரியால் வந்திருப்பவர்கள் இலக்ஷாதிகாரிக ளென்றும், மிக்க உதார குணமுடையவர்களென்றும் மேஸ்திரி எண்ணிக்கொண்டு அவர்கள் விஷயத்தில் அவ் வாறு நடந்து கொள்ளும்படி கட்டளையிட்டான். கிருஷ்ணுராவின் காரிய சித்திக்கு ஹோட்டல் வேலையாட் கள் அப்படிக் கருதுவதால் மிக்க அனுகூலமாதலின் அவன் அவ்வாறு அவர்களை மயக்க முயன்முன்.

அச்சிற்றுண்டியை வட்டித்து விட்டு வேலைக்காரன் சென்றதே கண்ணம்மாள் கிருஷ்ணுராவை நோக்கி, "அயோக்கியத்தனம் எவ்வளவு அதிகமாக விருக்கிறதோ

அவ்வளவுக்கவ்வளவு வெளிப்பகட்டு மிக்க நேர்த்தியாக விருக்கிறது" என்றாள்.

கிருஷ்:—"ஆம்; சின்ன மாளிகையின் விவகாரங்கள் மிக்க அபூர்வமானவைகளாகவே காணப்படுகின்றன. நமக்கு இராப்போஜனம் கொண்டுவரச் சற்றுநேரம் பிடிக்கும். ஏனம்மா கண்ணம்மா! இது காறும் நீ கீழே கண்ட விஷயங்களில் கவனிக்கத்தக்கது என்று எதையேனும் கருதுகிறாயோ?" என்று வினவினான்.

கண்ணம்மாள் "நாம் மாடிக்கு ஏறி வரும்போது கீழுள்ள அறையில் உட்கார்ந்திருப்பவர்களில் ஒரு அழகிய மாதிருப்பதைக்கண்டேன்" என்றாள். கிருஷ்ணராவ்நகைத் துக்கொண்டே என் அபிப்பிராயத்தை யுன் அபிப்பிராயத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கவே கேட்டேன். நானும் நீ கூறியமாதைக் கவனித்தேன். நீயும் அவள்போல் ஒரு ஸ்திரீயாகவிருப்பதால் அதிலும் துப்பறியும் ஆளாக விருப்பதால் நீ அம்மாதைக் கவனித்தே யிருப்பாயென்று நான் நம்பினேன். ஒரு மனிதன் பிரியப்படத் தக்க பெண் இருப்பாளாயின், அப்பெண் இவளே யெனலாம். இது முதலாவது விஷயம். இப்போது நாம் வந்தபோது இன்னும் ஏதேனும் விஷயத்தை நீ கவனித்தாயோ?" என்றான்.

கண்ணம்மாள்:—"ஒன்றுமில்லே. இங்கே எல்லாம் மிக்க சாமார்த்தியமாகவும் சாத்திரயுக்தமாகவும் நடைபெறுகிறது. இங்கு எல்லாம் மிக்க நேர்மையாகவும் ஒழுங்காகவுமே நடைபெறுவதுபோலும், வெளிக்கு இங்குச் சட்டத்திற்கு விரோதமாக ஒன்றுமே நடைபெறுதுபோலும் தோன்றினாலும், நமது ஆசாமிகள் சற்று ஜாக்கிரதையாய்க் கவனித்தால் இங்கு ஏதேனும் கண்டு பிடிப்பார்கள் என்பது நிச்சயம். உன்

அர்த்தம் என்ன? அம்மாதைக் கண்டது முதலாவது என்றாய். இரண்டாவது என்ன?" என்றாள்.

கிருஷ்ணராவ்:—"நாம் உள்ளே வந்தபோது வாயிற்படி நுழையும் சமயம் முன்னே தோன்றும் சாளரத்தில் "டாக்டர் வீரப்பன்" என்று பெரிய எழுத்துக்களில் எழுதப்பட்ட விளம்பரத்தைக் கண்டேன். அந்த அநாமதேயக் கடிதத்தில் ஒரு டாக்டரைப் பற்றிக் கூறப்பட்டிருந்ததல்லவா? அந்த டாக்டர் இந்த ஹோட்டல் வைத்தியர் என்று நினைக்கிறேன்" என்றான்.

கண்ணம்மாள் தலையசைத்து "நீர் கூறுவது உண்மையே. இவன் இதில் எப்படிச் சம்பந்தப்பட் டிருப்பானென்று நினைக்கிறீர்?" என்றாள்.

கிருஷ்:—"அதைக்கூற முடியாது. ஒன்றும் யோசிக்காமலே, இத்தகைய விடத்தில் இத்தகைய மனிதன் இருக்கிற வரையில் இவன் கவனிக்கத்தக்கவனே யென்பது என் அபிப்பிராயம். அவன் ஒரு வைத்தியன் என்பதைப்பற்றி நமக்கு ஒன்றும் தெரியாது. ஆனால் அவன் இங்குப் பயிற்சியடைந்திருக்கவேண்டும். இத்தகைய விடத்தில் இவன்போன்ற ஒரு வைத்தியன் இங்குள்ள மூல ஆசாமிகளிடம் பயிற்சியடைந்திருந்தால், இவன் மிக்க அபாயகரமான மனிதனாகவிருக்கவேண்டும்" என்றான்.

கண்ணம்மாள்:—"அக்கடிதத்தில் ஏதோ மருந்துகளைப் பற்றிக் கூறப்பட்டிருந்தது" என்று தனக்குத்தானே கூறிக் கொண்டாள்.

கிருஷ்:—"ஆம் இவர்கள் குடி வகைகளை அதிகமாக வரவழைக்கிறார்கள் என்பது தெரிகிறது. அது போதாமல் கன்னிகைகளை மயக்குவதற்காக மூலிகைகளையும்

உபயோகிக்கவேண்டிய அவசியம் இவர்களுக்கு நேர்கிறது. இதனால் இவர்கள் இரசாயன ஆராய்ச்சியுடைய ஒரு வைத்தியரையும் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இவர்கள் காரியங்களுக்கு இத்தகைய ஆசாமி வேண்டியதே. இங்கிருப்பவர்கள் பெண்களை வசீகரமாகத் தோன்றுமாறு செய்ய டாக்டர் உதவியாயிருப்பான். அவன் பணம் சம்பாதிக்க இது மிக்க அனுகூலமானவிடம்" என்றான்.

இதைக்கேட்ட கண்ணம்மாள் சற்று சிந்தனையிலிருந்தாள்.

8—வது அத்தியாயம்.

கண்ணம்மாள் சற்று நேரங்கழித்து கிருஷ்ணராவை நோக்கி, "இத்தகைய வைத்தியர்கள் இந்நகரில் அவர்கள் இருக்குமிடங்களி லெல்லாம் பிரதானமானவர்களாகவே கருதப்படுகிறார்கள் என்பதை நான் கண்டறிந்திருக்கிறேன். இராஜாங்க விவகாரங்களில் ஆழ்ந்து வேலை செய்யும் ஒரு டாக்டர் 'யார் என்னை யவர்கள் கட்சியில் வைத்துக் கொள்கிறார்களோ அவர்கள்மேல் ஒருவரும் எவ்விதக் குற்றமும் சாட்டமுடியாது' என்று பெருமையாய்க் கூறிக்கொள்கிறான். அதைப்பற்றி நான் அறிவேன். இந்த டாக்டர் வீரப்பன் என்பவன் அத்தகைய ஆசாமியே" என்றாள்.

கிருஷ்ணராவ் மெதுவாய் "உன்னுடைய ஆட்கள் இந்த மூலிகைகளின் விஷயத்தைப் பற்றிக் கவனிக்கிறார்கள் என்று கருதுகிறேன்" என்றான்.

கண்ணம்மாள்:—"ஆம்; மிக்க அதிகமாகவே கவனிக்கிறார்கள். திருட்டாந்தமாய் அனேக சந்தர்ப்பங்களில்

நிரபராதியும் களங்கமற்றவர்களுமாகிய அனேகம் பெண்கள் மருந்துகளாலேயே மயக்கப்பட்டுக் கொண்டுவரப்பட் டிருக்கிருர்கள் என்பதை நான் நேராகக் கண்டறிந்திருக்கிறேன். அதோடு பழைய மாதிரியல்ல-நவீனமாகக் கண்டு பிடிக்கப்பட்ட ஔஷதங்களைக் கொண்டே அவர்கள் வேலைசெய்கிருர்களென்று கண்டு பிடித்தேன். இதுவே மிக்க மோசமானது. இவர்கள் உபயோகிக்கும் மருந்துகள் பாஷாணங்களில் பலவிதங்கள். இங்கோ ஒவ்வொரு வேலைக்கும் ஒவ்வொரு மருந்தாய்ப் பல உபயோகிக்கிருர்கள் என்பதே என் அபிப்பிராயம்'' என்ருள்.

அச்சமயம் வேலைக்காரன் இராப்போஜனம் எடுத்துக்கொண்டு மெதுவாய்க் கதவைத் திறந்துகொண்டு உள்ளே வந்தான். கூட்டமாய் ஜனங்கள் போஜனம் செய்யுமிடத்திலிருந்து சங்கீதத் தொனியும் ஆடம்பரமான சம்பாஷணை கேளிக்கைகளின் சந்தடியும் இவர்களுக்குக் கேட்டன.

கிருஷ்ணுராவ் வேலையாளை நோக்கி "இம்மாதிரி தனியாகப் போசனம்செய்யும் அறைகள் இங்கு எத்தனையிருக்கின்றன?'' என்று வினவினன். அந்த ஆள் "இந்த அறையும் இன்னெரு சின்ன அறையுமே'' என்ருன்.

கிருஷ்ணுராவ்:—அப்படியாயின் இது எங்களுக்குக் கிடைத்தது நல்ல அதிஷ்டமே.

ஆள்காரன்:—ஆமாங்கோ, இரண்டில் இதுவே மேலானது. எங்கள் மேஸ்திரி இதை யாருக்கும் விடாமல் வைத்திருந்தார்.

கிருஷ்ணுராவ் இவன் கூறியதைக் குறிப்பாய்க் கவனத்தில் வைத்துக்கொண்டான். இன்னெரு அறையிலிருப்போர் மிக்க ஆர்ப்பாட்டம் செய்கிருர்கள். அவர்கள்

விசேஷமாகக் குடிவகைகளையே கொண்டு வரும்படி கட்டளையிடுகிறார்கள். அவர்களில் ஒருவரேனும் இவர்களுக்கு யார் என்று தெரியவில்லை. அவர்களும் இவர்களைப் பற்றிச் சற்றேனும் கவனிக்கவில்லை.

கிருஷ்ணராவ் "நாம் இங்குவந்து இந்த விடத்தை முழுமையும் சரியாகப் பார்க்காம லிருப்பது முட்டாள்தனமே. நான் கீழேபோய் ஒரு சுற்றுப்பார்த்துக்கொண்டு வருகிறேன். கூடுமானால் நாம் கண்ட அந்த அழகியமாதிடம் பக்குவமாகக் கலந்து பேசி அவள் இங்கு எவ்விஷயத்திலாவது சம்பந்தப்பட் டிருக்கிறாளாவென்று கண்டு பிடிக்க வேண்டும். ஜகநாதம்! நீ இடையில் நாம் இலக்ஷ்மண சாமியின் வீட்டிற்குச் சென்று அவனிடம் பேசிய விஷயத்தைப்பற்றிக் கண்ணம்மாளுக்குக் கூறு" என்றான்.

கிருஷ்ணராவ் எழுந்து சென்றபின் ஜெகநாதன் தானும் அவனும் இலக்ஷ்மணசாமி வீட்டிற்குச்சென்ற சங்கதியைப் பற்றிக் கண்ணம்மாளிடம் கூறினான். அதற்கு நெடுநேரம் பிடிக்கவில்லை. ஆனால் கண்ணம்மாள் அவ்விஷயத்தில் இரத்னபாய் சம்பந்தப்பட்டிருப்பதால் அதை மிக்க கவனத்தோடு கேட்டாள். அதற்குள் கீழே யாவும் பார்த்து விட்டு வரச்சென்ற கிருஷ்ணராவ் திரும்பி வந்துவிட்டான்.

ஜெகநாதன் அவனை நோக்கி "நீ அம்மாதைக் கண்டாயா?" என்று கேட்டான்.

கிருஷ்:—"பார்த்தேன். அம்மாது இங்கு டெலிபோனில் வேலை செய்பவள். அதோடு லிகிதருக்கு உதவியாயிருப்பவள். நான் லிகிதன் இல்லாத சமயத்தில் காரியாலயத்திற்குள் நுழைந்தேன். அம்மாது மட்டும் தனியே யிருந்தாள். நான் அவளோடு பேசிக் கொண்டே அந்த இடம் முழுமையும் நோக்கினேன். எழுதும் சாய்ப்பு மேஜையின் பின்னால் கடிதம் வைக்

கும்படி யொன்றிருந்தது. அதன்மேல் "டாக்டர் வீரப்பன்" என்று எழுதப்பட்டிருந்தது. அப்பெட்டியில் சொருகப்பட்ட ஒரு கடிதம் மேலே கொஞ்சம் தெரிந்து கொண்டிருந்தது. அதைப் பார்க்கவேண்டுமென்ற விருப்பம் எனக்குண்டாயிற்று. உடனே ஒரு டெலிபோன் நம்பரைக்கூறி அந்த இடத்தைக் கூப்பிடும்படி அம்மாதைக் கேட்டேன். அவள் எழுந்து டெலிபோன் எதிரில் சென்றதும் நான் அக் கடிதத்தை யெடுத்துக் கொண்டு வந்துவிட்டேன். இதோ அக்கடிதம்" என்று கூறிக்கொண்டே ஒரு கடிதவுறையை யெடுத்து எதிரில் மேஜைமேல் வைத்தான்.

அந்த உறையின்மேல் எழுதப்பட்டிருந்த மேல்விலாசம் ஒரு பெண்பாலின் கையெழுத்தென்றும், அவசரமாய் எழுதப்பட்டதென்றும் தெரிந்தது. கிருஷ்ணராவ் "இப்போது அந்த டாக்டர் தெரிந்து கொள்ளாத விதமாய் இதில் அடங்கியுள்ள சங்கதியை அறிந்துகொள்ள வேண்டுமென்பது என் விருப்பம். இப்போது இரகசிய இலாகா ஆட்கள் ஒருவர் அறிந்து கொள்ளாமல் கடித உறைகளைப் பிரித்து மறுபடி முன்போல் மூடிவிட மிகச் சாமார்த்தியமான வழிகளைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். சில மாதிரிக் கடிதங்களால் செய்யப்பட்ட உறைகளை நீராவியிற் காட்டி எள்ளளவும் தெரிய வொட்டாமல் பிரித்து விடலாம். பிறகு மூடி மேல்பக்கம் எலும்பினால் செய்யப்பட்ட ஒரு தட்டையான கருவியால் தேய்த்து கடிதத்தின் பளபளப்பு முன்போலவே தோன்றும்படி செய்து விடலாம். அவர்கள் இவ்வாறு செய்கிறார்கள். ஆனால் இதை யப்படிச் செய்யலாகாது" என்றான்.

அதன்பிறகு கிருஷ்ணராவ் கத்தியால் அக்கடித

உறையைத்திறந்து அதற்குள்ளிருந்த கடிதத்தை வெளியிலெடுத்துப் பின்வருமாறு மெதுவாய் வாசித்தான்:—

"இருமுறை டெலிபோனில் கூப்பிட்டேன்; பிறகு ஹோட்டலுக்கு வந்து பார்த்தேன்; எந்நேரமும் வெளியில் செல்வதுபோல் தெரிகிறது. மிக முக்கியமான ஒரு சமாசாசாரம் உன்னிடம் கூறவேண்டியிருக்கிறது. இராத்திரிக்கும் காலையிலும் எனக்கு மிக்க வேலையிருக்கிறது. ஆனால் நாளை மாலை நான்கு மணிக்குப் பூபாலன் காபி ஹோட்டலில் நான் இருப்பேன். நீ தவறாது அங்கு வரவும். மரகதம்."

கிருஷ்ணராவ் மறுபடி அக்கடிதத்தை இருந்தபடி மடித்து உறையில்போட்டு ஒட்டிவிட்டு உலர்ந்தபின் மீண்டும் ஹோட்டல் காரியாலயத்திற்குச் சென்று அக்கடிதத்தை அது இருந்தபடி பெட்டியில் வைத்துவிட்டான். அவன் திரும்பித் தங்கள் அறைக்கு வந்து "பிரதான போஜன அறையில் பெரிய கேளிக்கை நடக்கிறது. நாம் போகுமுன் அதைப் பார்த்துக் கொண்டுபோவது நலம்" என்றான்.

கால்மணி நேரங்கழித்துக் கிருஷ்ணராவ் ஹோட்டல் காரனிடம் தங்களுக்காகக் கொடுக்கவேண்டிய பணத்தைக் கொடுத்து விட்டபின் மூவரும் பிரதான போஜன அறைக்குச் சென்று ஒரு பக்கமாய் உட்கார்ந்தார்கள். கிருஷ்ணராவ் அங்கிருந்தவர்களையெல்லாம் பார்த்து விட்டுக் கடைசியில் "அந்த டாக்டர் வீரப்பனைக் காணவேண்டும். எப்படியாவது அவனால் எழுதப்பட்ட ஒரு கடிதத்தைக் கைப்பற்றவேண்டும். பிறகு காரியாலயத்திலிருக்கும் அப்பெண் இருக்கிறாள். அவள் இங்கிருக்கும் அனைவரிடமும் அந்தரங்கமாய் நடந்து கொள்கிறாள்" என்றான்.

கண்ணம்மாள் யாவரையும் நோக்கினாள். அச்சமயம் அங்கிருந்தவர்களில் ஒருவரேனும் தாங்கள் கண்டு பிடிக்க

வேண்டிய விஷயத்தில் சம்பந்தப்பட்டவர்களாக அவளுக்குப் புலப்படவில்லை. அங்கு நடக்கும் சங்கீதத்தில் அவளுக்கு விருப்பமில்லை. ஆகையால் இன்னும் அங்கு உட்கார்ந்திருக்க அவளுக்குப் பிடிக்கவில்லை.

கிருஷ்ணராவ் கண்ணம்மாள் நோக்கத்தையுணர்ந்து "எழுந்திருங்கள் போவோம்" என்றான். மூவரும் காரியாலயத்தின் எதிரிலுள்ள வழியாகச் செல்லும்போது கண்ணம்மாள் கிருஷ்ணராவின் தோளைத்தொட்டு "அதோ டாக்டர் வீரப்பன்" என்று மெதுவாகக் கூறினாள். கிருஷ்ணராவ் சட்டென்று காரியாலயத்திற்குள் நோக்கிய போது டாக்டர் அங்கிருக்கும் பெண்ணோடு பேசிக்கொண்டே கடித உறையை நுனியில் கிழித்து உள்ளிருந்த கடிதத்தை யெடுத்துக்கொண்டு உறையை யெறிவதைக் கண்டான்.

* * * *

துரைத்தன வக்கீலாகிய கருணாகரம் பிள்ளை முன்பு யோசனை செய்தபடி சில குற்றங்களுக்காக ஜட்கா சுப்பனைச் சிறை செய்துவிட்டார். ஆனால் அவனைச் சிறை செய்ததும் கள்ளக்கூட்டமனைத்தும் யுத்தத்திற்கு ஒரே மனதாக ஆயத்தமாய் விட்டன. ஏனெனில் அக்கூட்டத்தில் ஜட்கா சுப்பனுக்கிருக்கும் செல்வாக்கு அபரிமிதமானது.

கருணாகரம்பிள்ளை இக்கூட்டத்திற்கு விரோதமாய் வேலை செய்துகொண்டிருப்பவர். இவ்விஷயத்தில் எப்படி வேலை செய்யவேண்டுமென்றும், எந்த நியாயாதிபதிகளை இவ்விஷயத்தில் நம்பலாமென்றும், இதில் எத்தகைய மோசங்கள் இருக்கின்றனவென்றும், யாவும் அவருக்கு அனுபவமாய்த் தெரியும். ஆகையால் இந்த ஜட்கா சுப்பனைக் காப்பாற்ற பெரும் முயற்சிகள் செய்யப்படுமென்று அவர் முன்னமே ஊகித்துக்கொண்டார். ஆனால் கருணாகரம் பிள்ளை தம்மிடம் புத்தி சாமர்த்தியமுடைய அனேகம் வாலிபர்களை வைத்துக்கொண்டிருந்தது நற்காலமாயிற்று. கிருஷ்ணராவும் ஜகநாதனும் கொஞ்சக்காலம் வரையில் கருணாகரம் பிள்ளையைப் பார்க்கச் சந்தர்ப்பமும் வாய்க்கவில்லை.

186529